அரசு ஊழியர்

மாத இதழ்

2023 மே

மலர்:44 இதழ்:05

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆசிரியர் குழு:
மு.அன்பரசு, மு.பாஸ்கரன்,
தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன்,
கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி,
சா.டானியல் ஜெயசிங்,
சா.கோதண்டபாணி, அ.குபேரன்

வரைகலை: கார்ட்டுன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி



முகவரி:
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com



அச்சகம்:
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனாங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. போர்க்கோலம் ஒன்றுதான் பூலோகம் சிவந்திடும் பொற்காலம் கொண்டுவரும்!
   *தலைவர் மடல் ....................................4*
2. இன்னுயிர் ஈந்து பெற்ற உரிமைகளை வலிமையான தொடர் போராட்டங்களால் மீளப் பெறுவோம்!
   *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து.......7*
3. ஒரு தோழரின் அமைப்பு தின டைரிக்குறிப்புகள் ................................*10*
4. பூட்டி வைக்கப்பட்டிருக்கும் உரிமைகளின் கதவுகளை திறக்கட்டும் நம் உறுதிமிக்க போராட்டங்கள் ...................................*13*
5. ஆகப்பெரிய மூடத்தனம்! .......................*18*
6. நேசியுங்கள்! அதற்குமுன், வாசியுங்கள்!.....*20*
7. சென்னை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ....................................*22*
8. எதை சுமக்கிறோம் என்பதல்ல; எவ்வாறு உணர்கிறோம் என்பது முக்கியம்! .............*23*
9. தியாகச்சிங்கம் உத்தம்சிங்! ......................*24*
10. நிலுவை கோரிக்கைகளை நிறைவேற்றாத தமிழ்நாடு அரசைக் கண்டித்து அனைத்து அரசு அலுவலகங்கள் முன்பும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் .........................*25*
11. உடலை ஆராதிப்போம்! .......................*28*
12. ஒன்றிய அமைச்சரைக் காப்பாற்ற மல்யுத்த வீராங்கனைகள் மீது தரக்குறைவான தாக்குதல் ........................................*29*
13. மீண்டும் மேதினப் போர் ......................*31*
14. "பெரியார் தான் தமிழ்நாட்டுக்கு எல்லாம் பண்ணாரா?" .....................................*32*

# போர்க்கோலம் ஒன்றுதான் பூலோகம் சிவந்திடும் பொற்காலம் கொண்டுவரும்!

நான் ஆட்சிக்கு வந்தால் விலைவாசியை குறைப்பேன் என்று சொன்னார் 2013ல் பிரதமர் வேட்பாளராக இருந்த மோடி அவர்கள். அவர் ஆட்சிக்கு வந்து 9 ஆண்டுகள் ஆகிவிட்டது. அப்போது 140 ரூபாய்க்கு விற்ற கேஸ் சிலிண்டர் இப்போது 1,150 ரூபாய். 67 ரூபாய்க்கு விற்ற பெட்ரோல் இப்போது 105 ரூபாய். சிலிண்டருக்கான மானியத்தை நேரடியாக வங்கி யில் போடுவோம் என்று சொன்னதையும் போடாமல் நிறுத்தியிருக்கிறார்கள். அரிசி, பருப்பு, எண்ணெய், மிளகாய், தனியா என எல்லா அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையும் ஏறியிருக்க மக்கள் வாழ்வதா சாவதா என்கிற நிலையில் தள்ளாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆட்சிக்கு வந்தால் வருடத்தில் 2 கோடி பேருக்கு வேலை கொடுப்போம் என்று சொன்னவர் மோடி. இருந்த வேலையும் இல்லாமல் போய் அல்லது மிகக் கடுமையானதாக மாறி கிடைத்துக் கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச வருமானமும் நின்று போனதுதான் மிச்சம். கருப்பு பணத்தை ஒழித்து ஒவ்வொருவருடைய வங்கிக் கணக்கிலும் ஆட்சியேற்ற நூறு நாட்களுக்குள் ரூ 15 லட்சம் போடுவோம் என்று சொன்ன மோடி கருப்பு பணத்தையும் ஒழிக்கவில்லை ரூ 15 லட்சத்தையும் போடவில்லை. ஆனால் முதலாளிகளுக்கு மட்டும் கடன் தள்ளுபடி ஊக்கத்தொகை என எல்லாம் செய்கிறது. விமானம், விமான நிலையம், துறைமுகம், ரயில் நிலையம், எல்ஐசி வங்கி நம் தேசத்தின் சொத்தை எல்லாம் வாரி அதானிக்கு கொடுக்கிறது.

மத்திய பட்ஜெட்டில் பணக்காரர்களுக்கு லட்சக்கணக்கான கோடியை வாரிக் கொடுத்துவிட்டு ஏழைகளுக்கு மட்டும் ஆப்பு மேல ஆப்பு வைக்கிறார்கள். நாடு முழுவதும் இருக்கிற 85 கோடி மக்களுக்கு ரேஷன் கடையில் இலவசமாக அரிசி கோதுமை வழங்க கொடுக்கப்பட்டு கொண்டிருந்த உணவு மானியத்தை 2.86 லட்சம் கோடியில் இருந்து இப்போது வெறும் 90 ஆயிரம் கோடியாக குறைத்திருக்கிறார்கள். 100 நாள் வேலைத்திட்டத்திற்கு நிதி குறைப்பு, விவசாய பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை கூட தர மறுத்தல், உரத்துக்கான மானியம் நிறுத்திவைப்பு போன்ற நடவடிக்கைகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. எதிர்த்து கேள்வி கேட்கும் பத்திரிகைகளை முடக்குவது, பத்திரிகையாளர்களை சிறையில் தள்ளுவது சிபிஐ அமலாக்கத் துறை நீதித்துறை என எல்லாவற்றையும் அரசியல் ஆதாயத்திற்காக தவறாக பயன்படுத்துவது என்று மோடியின் ஆட்சியில் அதிகார அக்கிரமங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன கார்ப்பரேட் முதலாளிகளுக்கும், மதவெறி சக்திகளுக்கும் கள்ளக் கூட்டணி வைக்கப்பட்டு முதலாளிகளை எதிர்த்து கேள்வி கேட்காமல் இருக்க மதவெறியைத்

தூண்டி மக்களை பிரிக்க பார்க்கிறது ஒன்றிய அரசு.

ஒன்றிய அரசு பட்ஜெட்டில் மாநில அரசுகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டால் நீங்கள் இலவச மின்சாரத்தை நிறுத்துங்கள், மின்சாரத்துறையை அதானியிடம் கொடுங்கள் மின்சார கட்டணத்தை உயர்த்துங்கள், சொத்து வரியை உயர்த்துங்கள் இல்லாவிட்டால் மாநிலத்திற்கு நிதி தர மாட்டோம் என்று மக்கள் தலையிலேயே சுமையை ஏற்றுகிறது ஒன்றிய அரசு.

பட்ஜெட்டில் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் பணத்தை குறைவாக ஒதுக்கியிருக்கிறது ஒன்றிய அரசு. காசு இருந்தால் கடித்துப் பிடித்துக் கொள் இல்லாவிட்டால் செத்துப்போ என்று ஒன்றிய அரசு சொல்லாமல் சொல்வது நம் காதுகளில் கேட்கிறது வேலை, கல்வி மருத்துவம், சமாதானம், தொழில் வளர்ச்சி போன்றவற்றை ஏற்படுத்த தவறியுள்ளதோடு, அமைதி மக்கள், ஒற்றுமை, மத நல்லிணக்கம் இவற்றைப் பற்றி பேசாமல் லவ் ஜிகாத், மாட்டுக்கறி, மசூதி மற்றும் நூலகத்தை கொளுத்துவது போன்ற தரம் தாழ்ந்த அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு.

அது அப்படித்தான் என்றால் தமிழ்நாட்டின் நிலையோ வேறு மாதிரியாக உள்ளது மத்திய அரசின் சட்டங்களை எல்லாம் மாநிலத்தில் நிறைவேற்றிவிட்டு இது ஒன்றிய அரசின் சட்டம் நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது என்று திராவிட அரசாங்கம் கூறுகிறது

சமூக நலன், சமூக அக்கறை, இட ஒதுக்கீடு சாதி சமயமற்ற சமுதாயம் என்றெல்லாம் பட்டி தொட்டிகளில் எல்லாம் முழங்கிய திராவிட கட்சி தான் இப்போது அவுட்சோர்சிங் முறையில் ஆள் எடுப்பதற்கும் 12 மணி நேர வேலையை திரும்ப கொண்டு வருவதற்கும் முண்டியடித்து நிற்கிறது. தோழமை கட்சிகள், எதிர் கட்சிகள் கண்டனக்குரல் எழுப்பியதோடு அவற்றை நிறுத்தி வைக்கிறது.

மதுபானக் கூடங்கள் திருமண மண்டபங்களில் நடத்தவும் அனுமதி வழங்குகிறது எதிர்ப்பு கிளம்பியதும் திரும்பப் பெறுகிறது தமிழக அரசுக்கு ஏன் இந்த தள்ளாட்டம். ஒன்று அது திராவிட ஆட்சியாக இருக்க வேண்டும் அல்லது பாஜகவின் ஊதுகுழல் என்று சொல்லிக் கொள்ள வேண்டும் இரண்டும் இல்லாத நிலையில் இப்படிப்பட்ட அராஜகங்களை மாநில அரசே செய்வது மலிவான அரசியல் ஆகும்.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தனக்கு நிகர் யாருமில்லை என்று சொன்னவர்தான் தமிழக முதல்வர் அவர்கள் ஆனால் கொடுத்த வாக்குறுதிகளை ஒன்றைக்கூட நிறைவேற்ற வில்லையே என்று ஒவ்வொரு அரசு ஊழியரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பழைய ஓய்வூதிய திட்டத்தை திரும்ப கொண்டு வர வேண்டும் என்பதில் நம்மை விட அக்கறை இருந்தது எதிர்க்கட்சி தலைவராய் இருந்த ஸ்டாலின் அவர்களுக்கு. தான் எதிர் திசையில் இருந்த போது அவரது துடிப்பு வேகம் எதிர்ப்பு எல்லாம் ஆளுங்கட்சியான பின் எங்கே போனது என்றே தெரியவில்லை? அதை செயல்படுத்தாமல் இருந்ததோடு மட்டுமல்லாமல் தற்போதைய நிதிநிலை அறிக்கையில் சட்டப்பேரவையில் தேசிய பென்ஷன் திட்டத்தில் தமிழக ஊழியர்களை சேர்க்க போவதாக வேறு அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறார்கள் தமிழக முதல்வர் இத்தகைய

நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை வெகுவாக பாதித்துள்ளது

இந்த அரசாங்கம் ஒரு லாபகரமான நிறுவனமாக செயல்பட வேண்டும் என்று முதல்வர் நினைக்கலாம். கூட இருக்கும் சில துறை அமைச்சர்களும் கூட நினைக்கலாம். ஆனால் மக்கள் நலனில் இலாப நட்ட கணக்கு பார்க்கும் அரசாங்கம் நல்லதொரு அரசாங்கமாக மக்கள் நல அரசாங்கமாக எப்போதுமே இருந்துவிட முடியாது. லாபங்களையும் சமூக நலத்திற்கான சேவைகளையும் சீர்தூக்கிப் பார்த்து எது மக்களுக்கு நலன் பயக்குமோ அதை செய்ய வேண்டிய அரசு தான் மக்கள் நல அரசு ஆகும்.

திமுக அரசு தொடர்ந்து மக்கள் நலனுக்கு எதிரான பாதையில் வியூகங்களை வகுப்பதும் முன்னெடுப்பதும் அவ்வப்போது வந்துகொண்டிருக்கும் அரசாணைகள் மூலம் தெளிவாகி கொண்டே இருக்கிறது. இதன் பின்னணி என்ன ஒரு அரசாணை வெளியீடுவது. அதனை எதிர்க்கட்சியினரும் தோழமைக் கட்சியினரும் எதிர்த்தால் அதை திரும்ப பெற்றுக் கொள்வது என்கிற போக்கிலேயே கடந்த 2 ஆண்டு கால ஆட்சி நகர்ந்துள்ளது. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத நிலையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோபம் இந்த அரசுக்கு எதிராக திரும்பி இருக்கிறது. இதை முதல்வர் அவர்கள் கண்டும் காணாமல் விட்டு விட்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களைப் பற்றி கவலைப்படாமல் கடந்து போனால் அது 24 இல் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் மட்டுமல்ல 26இல் நடைபெறும் சட்டமன்ற தேர்தலிலும் பட்டவர்த்தனமாக எதிரொலிக்கும் என்பதை உணரவேண்டிய கடைசி தருணம் இது. உணர மறுத்தால் மக்கள் நலம் என்றால் என்ன? அரசு ஊழியர்கள் என்றால் யார்? கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றா விட்டால் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை எல்லாம் முதல்வர் உணரும் காலம் வரும். ஆனால் அதுவரை நாம் காத்துக் கொண்டிருக்க முடியாது. இப்போதே நாம் போராட்டங்களை துவக்குவோம் மத்திய அரசாலும் சரி மாநில அரசாலும் சரி எந்த அரசாங்கமும் உரிமைகளை பறிக்க முயன்றாலும் அந்த அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவது உண்மையான ஜனநாயகம் ஆகும். அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் அதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல என்பதை நம்முடைய கடுமையான போராட்டங்களும் வலிமையான இயக்கங்களும் அரசுக்கு எடுத்துக்காட்டும். அந்த உணர்வோடு நமது இயக்கத்தின் இந்த 40ஆம் ஆண்டு அமைப்பு தினத்தில் உறுதி ஏற்போம். போர்கோலம் பூணுவோம். போர்கோலம் ஒன்றுதான் பூலோகம் சிவந்திடும் பொற்காலம் கொண்டுவரும்!

●

## சூடா ஒரு கோப்பை சூப்

### சரித்திரப் பெருமைகள் ஏன்?

அமைதியின் பேரால் இன்னும்
எத்தனை ஆண்டுக் காலம்
இமை மூடிக் கிடக்க வேண்டும்?
எண்ணினேன்; எண்ணும்போதே
குமுறினேன்; கொந்தளித்தேன்;
கொடுங்கோலின் பிடியை மீறத்
திமிறினேன்; இதனை வீழ்த்தத்
திறனில்லா வரை நமக்குத்
தமிழும் ஏன்? இலக்கியம் ஏன்?
சரித்திரப் பெருமைகள் ஏன்?

# இன்னுயிர் ஈந்து பெற்ற உரிமைகளை வலிமையான தொடர் போராட்டங்களால் மீளப் பெறுவோம்!

உழைப்பாள மக்கள் பெற்றிருக்கக் கூடிய ஒவ்வொரு உரிமைகளும் இரத்தம் சிந்தி, உயிர் ஈந்து பெற்ற உரிமைகளாகும். இன்று நாம் விடுமுறையுடன் கொண்டாடும் மே தினம் எட்டுமணி நேர வேலை உரிமைக்காக ஆகஸ்டு ஸ்பைஸ், ஆல்பர்ட் பர்ஸன், ஆஸ்கர் நீபி ஆகிய மூன்று தொழிலாளிகள் 1886ஆம் ஆண்டு மே ஒன்றாம் தேதி அமெரிக்கா ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி நடத்திய வேலை நிறுத்ததிற்காக தண்டிக்கப்பட்டு உயிர்த்தியாகம் செய்து பெற்றுத் தந்த உரிமைகளை நினைவுகூறும் தினமாகும். .

1800 களின் மத்தியில் அமெரிக்கா ஆஸ்திரேலியா நாடுகளில் உள்ள தொழிற்சாலைகளில் 15 முதல் 18 மணிநேரம் வேலைநேரமாக இருந்தது. இதை 8 மணி நேரமாக குறைக்க தொழிலாளர்கள் உரிமைக்குரல் எழுப்பினர். ஆனால் 10 மணி நேர வேலை என சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் இந்த வெற்றியுடன் தொழிலாளர்களின் போராட்டம் முடியவில்லை.

1886-ம் ஆண்டு மே மாதம் 1-ம் தேதியன்று சிகாகோ நகரில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதன் ஒரு பகுதியாக கார்மிக் ஹார்வெஸ்டர் என்ற கம்பெனியின் முன்னால் திரண்டிருந்த 500 தொழிலாளர்களிடையில் தோழர் ஆகஸ்டு ஸ்பைஸ் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

அமைதியான முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த இந்த கூட்டத்தை காவல்துறையினர் கண்மூடித்தனமாக தாக்கினர். இதில் ஒரு தொழிலாளி கொல்லப்பட்டார் மேலும் பலர் தாக்கப்பட்டனர்.

இந்த அடக்கு முறையை கண்டித்து அன்று இரவு, சிகாகோ நகரின் மையப் பகுதியில் உள்ள ஹே மார்கெட் என்ற இடத்தில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தோழர்கள் ஆகஸ்டு ஸ்பைஸ், ஆல்பர்ட் பார்ஸன்ஸ், சாமுவேல் பீல்டன் ஆகியோர் கலந்து கொண்டனர். சாமுவேல் பீல்டன் பேசிக்கொண்டிருந்த போது, ஜான்போன் பீல்டு என்ற அதிகாரியின் தலைமையில், 180-க்கும் மேற்பட்ட காவல்துறையினர் கூட்டத்தினரை வளைத்து உடனடியாக கலைந்து போகும்படி உத்தரவிட்டனர்.

சிறிது நேரத்தில் அங்கு கலவரம் வெடித்தது. அப்போது திடீரென்று காவல்துறையினர் மீது ஒரு கையெறி குண்டு வந்து விழுந்தது. அதில் ஒருவர் உயிரிழந்தார். 70-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதனை தொடர்ந்து காவல்துறையினர் துப்பாக்கியால் கூட்டத்தை நோக்கி சுட்டனர். இதில் பல தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

இந்த கலவரத்தை காரணம் காட்டி கலவரத்தை தூண்டி விட்டதாக தொழிலாளர்களின் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். 1886-ம் ஆண்டு மே 1-ம் தேதி கைது செய்யப் பட்டு ஒரு ஆண்டிற்கு மேலாக நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது. நீதிமன்ற விசாரணையில் ஆகஸ்ட் ஸ்பைஸோ, 'இந்த குற்றச் சாட்டே தனக்கு தற்காப்பு வாதமாக அமைந்து விட்டது" என எதிர்வாதம் செய்தார். காவலர்கள் மீது தான் குண்டு வீசியதாக அரசு தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டது இதன்மூலம் பொய் என நிரூபிக்கப்பட்டுவிட்டதாக வாதிட்டார். காவலர்கள் மீது வீசப்பட்ட குண்டு தன்னால் உண்மையில் வீசப்பட்டிருந்தால் அதை நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்வதில் தனக்கு எந்தவித தயக்கமும் கிடையாது என்று தைரியத்தோடு உரைத்தார்.

மற்றொரு தோழர் ஆல்பர்ட் பர்ஸன் நீதிமன்றத்தில் வாதாடுகையில், மரம் கனிகளால் அறியப்படுவதைப் போல் தொழிலாளர்கள், போர்க்குணம் மற்றும் தியாகத்தின் மூலம் தங்களது உண்மையான தலைவர்களை அடையாளம் கண்டுகொள்வார்கள். தங்களுக்கு அளிக்கப்படும் மரணதண்டனை தீப்பொறியாக உலகம் முழுவதும் பரவும் என ஆர்ப்பரித்தார். ஆஸ்கர் நீபி என்ற தோழர், கலவரம் விளைவிக்கப்பட்ட இடத்தில் நடந்த கூட்டத்திற்கு தான் தலைமை வகித்தேன் என்ற உண்மையை இந்த நீதிமன்றத்தில் ஒப்புக் கொள்வதாகவும், 8 மணி நேரம் வேலை கேட்டு போராடிய தொழிலாளர்களுக்கு நான் தலைவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப் படுவதாகவும் உரைத்தார்.

அடால்ப் பிட்சர் என்ற தோழர் நீதி மன்றத்தில் உள்ள காவலர்களைப் பார்த்து எள்ளி நகையாடி இவர்களா சட்டத்தின் காவலர்கள்? இவர்கள் திருடர்கள். அடுத்தவர்களின் சொத்தினை அபகரிப்பவர்கள் என எக்காளமிட்டார். தோழர் மைக்கேல் ஸ்வாப், நீதி மன்றத்தில் தங்களுடைய நோக்கம் கலகம் விளைவிப்பது அல்ல, சோசலிசத்தை அடைவதே என்று பிரகடனப்படுத்தினார். தோழர் ஜார்ஜ் ஏங்கல், தொழிலாளர்களின் தேவை, வேலை, ரொட்டி, அமைதி, இவை மூன்றுதான். இது கூட இவர்களுக்கு இன்று உத்தரவாதப்படுத்தப்படவில்லை என்று முழக்க மிட்டார்.

தோழர் சாமுவேல் பீல்டன் நீதி மன்றத்தில் உரையாற்றுகையில், நாங்கள் சோசலிசத்தைப் பேசினால் சிலர் பயப்படுகிறார்கள் நாங்கள் பிறரின் சொத்துக்களை சோசலிசத்தின் பெயரில் அபகரித்து விடுவோம் என நினைக்கிறார்கள். ஆனால் சோசலிசத்தின் நோக்கம் அது அல்ல. யார் ஒருவர் இன்னொருவருடைய சொத்துக்களை திட்டமிட்டு பறிக்கிறார்களோ அதை தடுத்து நிறுத்தக்கூடிய அமைப்பை உருவாக்குவதுதான் சோசலிசம் என விளக்கினார்.

சுரண்டப்படும் தொழிலாளர்களை திரட்டி, சோசலிச உணர்வுகளை ஊட்டி முதலாளித்துவ அமைப்பிற்கு எதிராக கிளர்ந்தெழச் செய்வதை ஒடுக்கவே, காவல்காரர்களே குண்டு வீசி சதி செய்து, தங்கள் மீது குற்றம் சுமத்தி மரண தண்டனை வழங்க திட்டமிட்டுள்ளார்கள் என்று தெரிந்திருந்தும், மே தின தியாகிகள் சிறிதும் அஞ்சவில்லை.

நீதிமன்றத்தில் வாதாடுவதன் மூலம் தாங்கள் தண்டனையிலிருந்து தப்பமுடியும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அந்தக் கொலைக் களத்தையும் பிரச்சார மேடையாக பயன்படுத்தி முதலாளித்துவத்தின் முகமூடியை கிழித்தெறிந்து, சோசலிசத்தின் மேன்மையை தூக்கிப் பிடித்து, நீதிமன்றத்தில் அவர்கள் ஆற்றிய உரை, ஆதிக்க சக்திகளின் திணறலையும், வரலாற்று ஆவணமாக மாற்றியுள்ளது. 1886-ம் ஆண்டு மே 1-ம் தேதி கைது செய்யப்பட்டு ஒரு ஆண்டிற்கும் மேலாக நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, 1887-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் தேதி அவர்கள் தூக்கிலிடப்பட்டதற்கு உலகம் முழுவதிலும் இருந்து கண்டனம் எழுந்தது. அதையொட்டி நடந்த தொடர் போராட்டங்களின் விளைவாக 1890ஆம் ஆண்டு தொழிலாளர்களின் கோரிக்கைகளை அமெரிக்க அரசு ஏற்று 8 மணிநேர வேலை உரிமையை அங்கீகரித்தது. இரத்தம் சிந்தி உயிர் ஈந்து போராடிப் பெற்ற இந்த எட்டு மணி நேர வேலை உரிமையை மற்ற மாநிலங்கள் அமல் படுத்தாமல் உள்ள நிலையில் தமிழ்நாடு அரசு 12 மணி நேரமாக மாற்றிட சட்ட முன்வடிவை கொண்டு வந்துள்ளது. உழைக்கும் வர்க்கத்தை மீண்டும் கொத்தடிமைகளாக மாற்றும் இந்த சட்டமுன்வடிவை அனைத்து தோழமை கட்சியினரும், எதிர்க்கட்சியினரும், தொழிற்சங்கத்தினரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் எதிர்த்து கடுமையான கண்டனக் குரல் எழுப்பிய நிலையில் அந்த சட்ட முன்வடிவு நிறுத்தி வைக்கப்பட்டு, மே 1 உழைப்பாளர் தினத்தில் அதை ரத்து செய்வதாக தமிழ்நாடு முதல்வர் அறிவித்துள்ளார். யாருடைய பேச்சையோ

கேட்டு தடாலடியாக அரசு ஊழியர் மற்றும் தொழிலாளர் விரோத சட்டங்களை தடலாடியாக இயற்றுவதும். பிறகு கடுமையான விமர்சனங்கள் வந்ததும் அவற்றை திரும்பப் பெற்றுக் கொள்வதும் வாடிக்கையாகி வருகிறது இந்த திராவிட மாடல் ஆட்சியில். 12 மணிநேர வேலை சட்டத்தை நீக்கியது போலவே அவுட்சோர்சிங் முறையில் ஆட்களை எடுப்பதற்கான அரசாணையையும் ரத்து செய்வதுதான் இந்த திராவிடமாடல் ஆட்சிக்கு உகந்ததாக இருக்கும்,

மணி நேர வேலை சட்டம் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே என்று அரசு ஊழியர்கள் அலட்சியமாக இருந்துவிட முடியாது. தொழிற்சாலைகளே 12 மணி நேரம் இயங்கும்போது அரசு அலுவகங்கள் இயங்கக் கூடாதா என்ற வாதம் வலுப்பெறும். அதற்கு ஏதுவாகத்தான் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை மனிதவள மேலாண்மைத் துறையாக மாற்றப் பட்டிருக்கிறது என்பது நம்மில் எத்தனை பேருக்கு புரியும். ஏற்கனவே தலைமை செயலகம், நீதிமன்றங்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை போன்ற பல துறைகளில் பணியாற்றுபவர்களில் பெரும்பான்மை பணியாளர்களும் அதிகாரிகளும் 12 மணி நேரங்களுக்கு குறையாத பணி செய்துகொண்டிருக்கும் நிலையில் இந்த சட்டம் எத்தகைய ஆபத்தை கொண்டுவந்து சேர்க்கும் என்று சொல்ல முடியாது. குறிப்பாக 12 மணி நேர வேலை என்பது பெண்களுக்கு அலுவலகத்தையும் இல்லத்தையும் சமன் படுத்த இயலாமல் போய் மன உளைச்சலையே ஏற்படுத்தும். அது குடும்பமா? வேலையா? என்று யோசிக்க வைக்கும். எனவே அரசுப் பணியில் உள்ளவர்களும் இதன் பின்விளைவுகளை சிந்தித்து ஆரம்ப கட்டத்திலேயே எதிர்க்க வேண்டிய அவசியம் உள்ளது. நான்கு நாள் வேலை மூன்று நாள் ஓய்வு என்பது ஏட்டளவில் தான் இருக்கும். நிலுவை பணிகளை முடிக்க ஐந்தாம் நாளும் அலுவலகம் செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் ஏற்கெனவே தமிழ்நாடு அரசுத் துறைகளில் காலியாக உள்ள ஆறு லட்சம் காலிப்பணியிடங்கள் முற்றாக ஒழிக்கப்பட்டு அதன் சுமைகள் 12 மணி நேரம் வேலை செய்யும் அரசுப் பணியாளர்களின் முதுகில் ஏற்றப்படும் வாய்ப்புகளும் அதிகம். ஏன் ஆகஸ்டு ஸ்பைஸ், ஆல்பர்ட் பார்ஸன்ஸ், சாமுவேல் பீல்டன் அடால்ப் பிட்சர், மைக்கேல் ஸ்வாப், ஜார்ஜ் ஏங்கல், சாமுவேல் பீல்டன் ஆகிய தோழர்கள் மரண தண்டனைக்கும் பயப்படாமல் போராடி தூக்கிலேறி எட்டு மணி நேர வேலைக்காக தங்கள் இன்னுயிர் ஈந்தார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர்கள் பெற்றுத் தந்த 8 மணி நேர வேலை உரிமையை விட்டு விடாமல் காக்க இந்த மே தினத்தில் உறுதி ஏற்பதே நாம் அவர்கள் சிந்திய இரத்தத்திற்கு பெருமை சேர்ப்பதாக இருக்கும். .

நம்முடைய இயக்கத்தின் 40ஆம் ஆண்டு அமைப்பு தினம் இந்தமாதம் நடைபெறுகிறது, 20 ஆண்டுகளாக நாம் போராடிவரும் பழைய ஓய்வூதியத்தை திரும்பக் கொண்டுவருதல் உள்ளிட்ட கோரிக்கைகளை நிச்சயம் நிறைவேற்றித் தருவதாக உறுதிமொழி கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்னும் நிறைவேற்றாமல் நம்மை இலவுகாத்த கிளிகளாக காக்க வைத்துள்ளார், அசாத்திய பொறுமைகளுக்கும் காத்திருப்புகளுக்கும் பின்னர் நாம் நம்முடைய போர்க்குணத்தை 1988ஐப் போல் 2003ஐப் போல் இந்த அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது, நாம் இதுவரை பெற்ற உரிமைகள் அனைத்தும் நம் விடாப்பிடியான போராட்டங்கள் முலம் பெற்றவையே என்பதை நாடும் அறியும். ஆட்சியாளர்களும் அறிவர், அதைத்தான் இந்த அரசாங்கம் மீண்டும் எதிர்பார்க்கிறது என்றால், நாம் நம்முடைய போராட்டங்களை வலிமையாக்கி. விடாப்பிடியாகப் போராட வேண்டியது அவசியமாகும், கடுமையாகப் போராடாமல் உரிமைகளை வென்றெடுக்க இயலாது என்பது காலம் சொல்லும் வரலாறு, அதை நாம் இன்னொரு முறை நிகழ்த்திக் காட்டிட வேண்டும் என்பதை நம் அமைப்புதின உறுதியாக வரிந்து கொள்வோம், தோழர்கள் அனைவருக்கும் மே தின மற்றும் அமைப்புதின வாழ்த்துக்கள்! ●

# ஒரு தோழரின் அமைப்பு தின டைரிக்குறிப்புகள்

**- ஜிஜி**

நாம் இயந்திரங்களை மதிப்பிடக் கற்றுக் கொண்டிருக்கிறோம்; கடமை தவறாது குறிப்பிட்ட நேரத்திற்குள் அறிக்கையை தயாரித்து அனுப்புகிறோம்; நிர்வாகம் என்ன சொன்னாலும் பம்பரமாய் சுற்றி சுற்றி வேலை பார்க்கிறோம்; ஆனால் இன்று நம் பிரச்சினை என்ன? அரசு, நிர்வாகம் இவற்றால் நமக்கு வரவுள்ள ஆபத்து என்ன? இவற்றிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்வது எப்படி இது குறித்து நாம் ஏதாவது சிந்திக்கிறோமா?

நிர்வகக்தின் மீதான அச்சம் மட்டும்தான் இருக்கிறது. நியாயமான கோரிக்கைகளை நிர்வாகத்திடம் யார் கேட்பது என்பதில் ஊழியர்களுக்குள் மிகுந்த தயக்கம் இருக்கிறது. `நம்முடைய இடர்ப்பாடுகளைக் யார் களைவார்கள்?` என்ற எதிர்பார்ப்பு மட்டும் ஊழியர்களிடம் எப்போதும் இருக்கிறது.

யார் இடையூறுகளைக் கண்டு ஓடி ஒளியாமல், அஞ்சி நடுங்காமல் அவைகளை வெல்வதற்கு எதற்கும் தயாராக நின்று அந்த இடையூறுகளை நேரடியாக சந்திக்கிறார்களோ, அவ்வாறு இடையூறுகளை எதிர்த்து போராடுபவர்களால்தான் வேலைக்கான கௌரவமான ஊதியத்தையும் உழைப்போருக்கான உரிமைகளையும் பெற்றுத்தர முடியும். அது தனிமனிதனால் சாத்தியமல்ல. அது சாத்தியப்பட வேண்டும் என்றால் பணிபுரியும் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அத்தகைய தோழர்களின் சங்கமமே சாதிக்கும். அதுதான் அமைப்பு! அதுதான் இயக்கம்! அதுதான் சங்கம்!

வலியை உணர மறந்து விட்டால் அல்லது அந்த உணர்வை இழந்து விட்டால் அது ஆபத்து மட்டுமல்ல அழிவும்தான்! சமூகத்தின் வலியில் அது விழுந்து விடாமல் இருக்கவும், அதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதனை துடைத்துதெறியாமல் முன்னேற்றம் காணுவோம் வளர்ச்சி பெறுவோம் என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதையே.

ஊழியர்கள் ஒவ்வொருவரும் ஒரு சிட்டுக்குருவி. அந்த சிட்டுக்குருவிகளை முன்னணி தோழர்களும், சங்க நிர்வாகிகளும், சிறப்பாகப் பழக்கினால் அவை வானத்தில் வட்டமிடும் வல்லூறுகளை அடித்து வீழ்த்தும் வல்லமை பெறும். அதை இன்றைய தொழிற்



சங்கங்களும் ஊழியர் அமைப்புகளும் செய்து கொண்டிருக்கின்றனவா என்பது பெரிய கேள்விக்குறி. சங்கம் நடத்தும் கூட்டங்களில் போராட்டங்களில், வேலை நிறுத்தங்களில் கணிசமான ஊழியர்கள் பங்கேற்காமல் இருக்கிற நிலைமை உருவாகி இருக்க காரணம் ஊழியர்களுக்கு அவர்களின் பொருளாதார சூழ்நிலை பற்றிய பயம் அல்ல. அவர்கள் சங்கங்களின் மீதும் அதன் நிர்வாகிகள் மீதும் நம்பிக்கையற்றுப் போயிருப்பதுதான். அதனால் சங்க நிர்வாகிகள் அனைவரும் ஊழியர்களுக்கு சங்கத்தின் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாகத் துவக்கியாக வேண்டும்.

முன்னணி ஊழியர் ஒவ்வொருவரும் எல்லா முனைகளிலும் தங்கள் சங்கப் பணிகளைத் உடனடியாகத் துவக்கியாக வேண்டும். ராணுவத்தை போல அனுதினமும் பயிற்சி அவசியம். நல்ல ஊதியத்திற்காக நல்ல வாழ்க்கைக்காக போராட விடாமல், இருப்பதை காப்பாற்றிக் கொள்ளவே போராட வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி தொழிற்சங்கத்தை பின்னுக்குத் தள்ளுகிற வேலையை ஆளும் வர்க்கம் செய்துகொண்டே இருக்கிறது. அதை எதிர்த்துப் போராட வலிமை மிக்க, மன உறுதிகொண்ட, இயக்கத்தின் நலனுக்காக விடாப் பிடியான கொள்கைகளை, இலட்சியங்களைத் தாங்கி நிற்கும் தலைவர்களும், நிர்வாகிகளும், முன்னணி ஊழியர்களும் தேவை.

இன்று ஊழியர்களின் சம்பளம் ஊதிய மாற்றக் குழுவால் நிர்ணயிக்கப்படுகிறது. ஊழியர் சங்கங்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தாமலே ஊதியங்கள் முரண்பாடுகளுடன் மாற்றி அமைக்கப் படுகின்றன. கொடுப்பதை வாங்கிக்கொண்டு சும்மா இருப்பதற்கு ஊழியர்கள் ஒன்றும் பிச்சைக்காரர்கள் அல்ல. அவர்கள் தான் இந்த மண்ணின் சாரமும், உரிமையாளர்களும் ஆவார்கள்.

நிகழ்காலத்தில் ஊழியர்களிடத்தில் சங்கத்தின் அவசியம் பற்றிய புரிதல்களை வளர்த்தெடுப்பதில் சங்க நிர்வாகிகள் தலைகீழாகத் தொங்கி நிற்க வேண்டியுள்ளது. வளைத்தளங்களைத் தாண்டி, தொலைக்காட்சிகளைத் தாண்டி, சாமிகளை, சாதிகளை, ஆதிக்க கலாச்சாரங்களைத் தாண்டி, அரசியல் கட்சிகளைத் தாண்டி சங்கத்தை நடத்திச் செல்ல வேண்டிய அழுத்தம் இன்று ஒவ்வொரு சங்க நிர்வாகியிடமும் உள்ளது.

கொடி பிடிப்பதற்கும், கோஷம் போடுவதற்கும், கோரிக்கை பேரணி செல்வதற்கும் அச்சப்படுகிற ஊழியர்கள் ஒரு பக்கமும், கௌரவம் பார்க்கின்ற ஊழியர்கள் மறுபக்கமும் ஒவ்வொரு அலுவலங்களிலும் அதிகரித்து வருகிறார்கள். தொழிற்சங்க இயக்கத்தின் முதல் பாடம் கூச்சப்படாமல் அலுவலக வாசலில், தெருவில் நின்று கொண்டு கோஷம் போடுவது தான். அந்த பால பாடத்தை பயிற்றுவிப்பதற்கே ஊழியர்களைத் திரட்ட முடியாமல் இன்றைய ஊழியர் சங்கங்கள் திணறிக் கொண்டிருக்கின்றன.

தொழிலாளர்கள் அல்லது ஊழியர்கள் ஒன்றினைந்து தாங்களாகவே விரும்பி அமைத்துக்கொள்ளும் அமைப்புதான் சங்கம் அல்லது தொழிற்சங்கம் அல்லது ஸ்தாபனமாகும். அவர்கள் சமூக மாற்றத்திற்கான வரலாற்றுக் கடமையை செய்யும் நோக்கத்தை கற்றுக்கொள்ளும் தொடக்கப் பள்ளிக் கூடமாகவும் இந்த தொழிற்சங்க ஸ்தாபனம் விளங்கவேண்டும்.

உடனடி தேவைகளுக்காகவும், கோரிக்கைகளுக்காகவும் நடத்தப்படும் போராட்டங்கள் அனைத்தும் சமூக மாற்றத்திற்காக நடத்தப்படும் நெடிய போராட்டத்தின் ஒரு பகுதியே.

அவ்வப்போது எழும் பிரச்சனைகளுக்காக அதாவது பஞ்சப்படி, ஊதிய உயர்வு போன்ற உடனடி பொருளாதார கோரிக்கைகளுக்காக மட்டும் போராடினால் போதும் என்பவர்கள் இன்று மட்டும் வயிறு நிறைந்தால் போதும் என்ற எண்ணம் உள்ளவர்கள். அவர்கள் ஊழியர்களை, தொழிலாளிகளைச் சுரண்டி சுகம்காணும் அதிகார வர்கத்திற்கு ஆதரவான போக்கை, அதைப் பற்றிய குறைந்தபட்ச புரிதல்கள் கூட இல்லாமல் கடை பிடிப்பவர்கள்.

சமூகத்தின் பல்வேறு பிரிவு ஊழியர்களிடமிருந்து வரும் பல்வேறு கருத்துக்களை தொகுத்து, ஒருமித்த சிந்தனையை ஏற்படுத்தி, சிந்தனையில் ஒத்த கருத்தை உருவாக்குவதில் சங்க நிர்வாகிகளின் பங்களிப்பு அவசியமானதாகும். அந்த நிலைதான் ஒன்றிணைந்த செயல்பாடுகளுக்கு இட்டுச்செல்லும் செயலுக்கான முழுப்பயனையும் விளைவிக்கும்.

சமூக மாற்றத்திற்கான போராட்டத்தின் ஒரு பகுதியே உடனடி கோரிக்கைக்கான போராட்டம் எனவே வாழ்க்கைக்காக போராடுவதும், போராடுவதற்காக வாழ்வதும் தவிர்க்க இயலாத ஒன்றாகும்.

உழைக்கும் மக்களுடைய இயக்கங்களில் இருந்து ஒதுங்கி நிற்பதோ அன்றி செயல்பாடுகளில் இருந்து பிரிந்து நிற்பதோ அரசு ஊழியர்களுக்கு அல்லது அவர்களுடைய ஸ்தாபனங்களுக்கு ஏற்ற நடைமுறைகள் அல்ல. அரசு ஊழியர்கள் கரத்தால் உழைக்கும் மக்களோடு இணைந்த கருத்தால் உழைக்கும் ஒரு பிரிவினர்தான் அரசு ஊழியர்களின் விடுதலை என்பதும் உழைக்கும் மக்களுடைய விடுதலையோடு பின்னிப்பிணைந்து ஒன்றிணைந்ததுதான்.

போராட்ட வரலாறுகளின் போதனையே இதுதான் அசைவில்லாத இருக்கின்ற அரசு ஊழியர் இயக்கங்களின் அசமந்த நிலைமைகளை போக்கி ஆகவேண்டும்.

தொழிற்சங்கத்தின் ஒரு வரலாற்றுக் கடமை உண்டு. அந்த கடமையை நிறைவேற்ற திறமைவாய்ந்த தலைமை தேவை; உணர்வுள்ள போர்க்குணமிக்க தொண்டர்கள் தேவை; முழுமையான ஜனநாயக ரீதியான நடைமுறை தேவை.

ஒரு போராட்டத்தின் போது தான் ஒரு தோழன் மற்றொரு தோழனுக்கு இனியவனாகிறான் என்ற புகழ்பெற்ற கவிதை வரி உண்டு. எனவே எத்தகைய தடைகள் ஏற்பட்டாலும் அவைகளை உறுதியுடனும் நிதானமாகவும் விடாமுயற்சியோடும் தியாக மனப்பான்மையோடும் எதிர்கொண்டு வெற்றியை பறித்து எடுக்க வேண்டும்

உலகில் போராளிகள் அவர்களின் நம்பிக்கைகளால் தீர்மானிக்கப்படுவதில்லை மாறாக அவர்களின் நம்பிக்கையின் வரம்பிற்குள் அவர்கள் சோதிக்கப்படும் போது அதற்கு அவர்கள் ஆற்றும் எதிர்வினைகளால் தீர்மானிக்கப் படுகிறார்கள் என்கிறார் பிடல் காஸ்ட்ரோ. தற்போதைய அரசாங்கங்களால் சங்கவாதிகளின் நம்பிக்கைகள் பொய் வாக்குறுதிகள், மௌனங்கள், மற்ற உழைக்கும் பிரிவனர்களுடனான ஒப்பீடுகள் மூலம் அனுதினமும் சோதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இத்தகைய நவீன கால சவால்களை சமாளிக்க சங்கவாதிகள் வலிமையான போராட்டங்களைத் தாண்டி புதிய அணுகுமுறைகளை, போர்க்குணங்களை, கண்டுபிடித்தே தீர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இந்த மாத 'நச்' கவிதை:

**எல்லா மீன்களும் வலைக்குள்**
**திமிங்கலத்தைத் தவிர –**
**அது கரையில் இருந்தது.**

- தணிகைச் செல்வன்

# பூட்டி வைக்கப்பட்டிருக்கும் உரிமைகளின் கதவுகளை திறக்கட்டும் நம் உறுதிமிக்க போராட்டங்கள் !

**- மு. அன்பரசு**

உழைக்கும் தொழிலாளிகளின் உரிமைகளுக்காக தொழிலாளிகள் தொடங்கிய முதல் போராட்டமும், ஊழியர்கள் நலனுக்காக நாம் தொடங்கிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற இந்த பேரியக்கமும் மே மாதத்தில் வருவது பொருத்தமான நிகழ்வே. தொழிலாளர்களுக்காக நாம் போராடுவதும், உழைக்கும் ஊழியர்களுக்காக தொழிலாளர்கள் போராட்டங்களில் கலந்து கொள்வதும், இரு தரப்பினரின் உரிமைகளுக்காக எல்லோரும் சேர்ந்து இந்திய அளவில் வேலை நிறுத்தங்களை மேற்கொள்வதும் இன்றைய காலகட்டங்களில் வழக்கமான நிகழ்வுகளாக மாறியுள்ளன.

"எங்களைத் தூக்கிலிடுவதன் மூலம் தொழிலாளர் இயக்கத்தை நசுக்கிவிடலாம் என்று நீங்கள் நினைத்தால்... லட்சக்கணக்கான ஒடுக்கப்பட்டோரும், துன்பங்களில் உழல்வோரும் விடுதலைக்காக எதிர்பார்த்திருக்கும் இயக்கத்தை நசுக்கிவிடலாம் என்று நினைத்தால்... இதுதான் உங்கள் எண்ணம் என்றால் எங்களைத் தூக்கிலிடுங்கள். இங்கு நீங்கள் ஒரு சிறு தீப்பொறியின் மீது கால் வைக்கிறீர்கள்...ஆனால் இங்கே, அங்கே... உங்களுக்கு முன்னால், பின்னால்...எங்கும் தீப்பந்தங்கள் ஒளிரும். இது அணையா நெருப்பு... உலகம் முழுவதும் உழைப்பாளி மக்களுக்கு எதிரான அனைத்தையும் இது சுட்டுப் பொசுக்கும்" சிகாகோ நகரின் ஹப்பர்ட் தெரு காவல் நிலையத்திற்கு இடையில் உள்ள சந்தில்...நடைபாதையில் அமைக்கப்பட்டிருந்த தூக்குமேடையில் ஆகஸ்ட் ஸ்பைஸ், பிஷர், ஏங்கேல் மற்றும் பார்சன்ஸ் ஆகிய நால்வரும் எந்தவிதக் கவலையும் இன்றி நின்று கொண்டு பேசிய அந்தக் காட்சி கண்களில் விரிகிறது. "இன்று நீங்கள் நெறிக்கும் எங்கள் குரல்வளைகள் மிகவும் சக்தி வாய்ந்ததாக மாறும் காலம் வரும்." என்றார் ஸ்பைஸ். பிஷரும், ஏங்கேலும் அந்தத் தூக்குமேடையில் நின்றுகொண்டு "இதுதான் எங்கள் வாழ்க்கையின் மகிழ்ச்சியான தருணம்." என்றனர்.

கடைசியாக பார்சன்ஸ், "ஓ அமெரிக்கர்களே... நான் பேச அனுமதிக்கப்படுவேனா? என்னைப் பேசவிடுங்கள்... மக்களின் குரல் கேட்கட்டும்." என்று கூறிய வார்த்தைகள் நேற்று கூறியதைப் போல் இருக்கிறது. 1887 நவம்பர் 11ஆம் தேதி உண்டான தீப்பொறி தீப்பந்தமாகி நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இன்னமும் எரிந்து கொண்டிருக்கிறது.

இது நடந்து 130 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடி அவற்றில் சில உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். உலகப் பெரும் பணக்காரர்களாலும் அவர்களுக்கு விலைபோய்விட்ட அரசியல்வாதிகள் இயற்றும் கருப்புச் சட்டங்களாலும் தொழிலாளர்களின் போராட்டங்கள் தொடர்கதையாகியுள்ளன. விலைமதிக்கத்தக்க உயிரையும், உதிரத்தையும் சிந்தி முன்னோடித்தோழர்கள்

பெற்றுத்தந்த உரிமைகள் அவ்வப்போது பறிக்கப்படுவதும், அவற்றை திரும்பப்பெற தொழிலாளர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டிருப்பதும் உலகநியதியாக மாறிவிட்டது. ஆக போராட்டங்கள் தான் நம் உரிமையை காக்கும் போர்வாளாக மாறியுள்ளது.

1886ல் நடந்த போராட்டங்கள் 15 முதல் 18 மணி நேர வேலையை 8 மணிநேர வேலை நேரமாக குறைக்க நடந்த போராட்டம். ஆனால் சென்னை மாகாணத்தில் 1833ல் சனாதன தர்மத்தை எதிர்த்து சங்கம் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வு குறிப்பேடுகளில் காணக்கிடக்கிறது. 1833ல் சமத்துவ சங்கம் என்ற அமைப்பு ஐயா வைகுண்டசாமி என்பவரால் உருவாக்கப்பட்டுள்ளது. இது உருவாகிட காரணமாக இருந்த சம்பவத்தைப் பார்ப்போம். ஐயா வைகுண்டசாமி அவர் பெற்றோருக்கு குழந்தையாக பிறந்தபோது அவருக்கு அவர்கள் இட்ட பெயர் முடிசூடும் பெருமாள் என்பதாகும். இப்பெயரை உயர்சாதியினர்தான் வைக்க வேண்டும் நீங்கள் வைக்கக்கூடாதென இவரது பெற்றோரிடம் அவரது பெயரை முத்துக்குட்டி என மாற்றம் செய்ய வேண்டும் என அரசு அதிகாரிகள் நிர்ப்பந்தம் செய்தனர்.

அவ்வாறு செய்ய முடியாதென அவர் பெற்றோர் மறுக்க அதன்காரணமாக அவர்கள் மேல்சாதியினரால் கடுமையாக தாக்கப்பட்டனர். இத்தகைய சாதிய ஒடுக்குமுறைகளைக் கண்ட முடிசூடும் பெருமாள் அவர்களுக்கு எதிராக போராட வேண்டும் என்ற உத்வேகம் பெற்றார். இதற்கு எதிராக போராட ஒரு அமைப்பை உருவாக்கிட வேண்டும் என்ற நோக்கத்தோடு 1833ல் சமத்துவ சங்கம் என்ற சங்கத்தை உருவாக்கி மக்களைத் திரட்டி தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக பயிற்சி முகாம்களை நடத்தி அதற்கு எதிராக போராடுவதற்கான உத்வேகத்தை உருவாக்கினார்.

ஒவ்வொரு மனிதனும் தன்னைப்போல் சக மனிதனையும் பாவிக்கிற சன்மார்க்க சிந்தனையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான கோட்பாடுகளை உருவாக்கி 1865ஆம் ஆண்டில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் என்ற ஒரு அமைப்பை செங்கற்பட்டுக்கு அருகில் உள்ள கருங்குழி கிராமத்தில் தொடங்கினார் இராமலிங்க சுவாமிகள்,

தென் தமிழகத்தில் மிககொடூரமாய் இருந்த இன ஒதுக்கல் நடவடிக்கைகளை கண்டு ஆவேசமுற்ற அய்யன்காளி என்ற போராளி 1907ல் சாது ஜன பரிபாலன சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்பாக உருவான இந்த அமைப்பில் அன்றைய நாளிலேயே ஐந்து லட்சம்பேர் உறுப்பினர்களாக இருந்தனர். அவர் கூட்டிய கூட்டங்களுக்கு அன்றைய ஆட்சியாளர்களால் ஒலிபெருக்கி அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் அதையும் மீறி தலைவரின் கருத்துக்கள் 5 லட்சம் பேருக்கும் கேட்கிற விதத்தில் ஒருவர்மாற்றி ஒருவர் ஆங்காங்கே தலைவரின் கருத்துக்களை கேட்டுக்கொண்டு ஆவேசமாக பரிமாறினர். அதன்மூலம் அச்செய்தி அனைவரையும் சென்றடைந்து உத்வேகம் பெற்று போராட்டக் களத்தில் ஒற்றுமையோடு நின்றனர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது சந்திரசேகர ஆசாத், பகத்சிங் ஆகியோரின் தலைமையில் ஏழை பணக்காரன் ஆண் பெண் பேதமின்றி பெரும் இளைஞர் பட்டாளம் இந்துஸ்தான் சோசியலிஸ்ட் ரிபப்ளிக் ஆர்மி (HSRA) என்ற அமைப்பின் கீழ் அணி திரண்டது. எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பதை கொள்கைப் பிரகடனமாக வெளியிட்ட முதல் இளைஞர் அமைப்பு அது.

”விடுதலை வேட்கையும், சுயமரியாதையும் இணைந்துவிட்டால் அரசாங்கத்தில் எவ்வளவு பெரிய பொறுப்பில் இருந்தாலும்

போராட்டப் பாதைக்கு வந்துதான் ஆக வேண்டும்" என்று முழங்கிய மேஜர் ஜெய்பால்சிங் அவர்களால் இந்திய ராணுவத்தில் சங்க அமைப்பு உருவானது.

மேற்கூறிய அமைப்புகள் எல்லாம் போராட்டங்கள் மூலமாகவே தங்கள் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று திடமாக நம்பின. அதனால்தான் அவை மக்களை ஒன்று திரட்டி ஒரு அமைப்பாக, இயக்கமாக, சங்கமாக மாறி இன்று வரலாற்றில் இடம்பிடித்துள்ளன.

அரசு ஊழியர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதும் இவைப்போன்றதொரு நிர்பந்தத்தால் தான். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் என்பதை உயர்த்திப்பிடித்து வளர்ந்த இயக்கம் இது. அதை பெற்றுத்தந்த பெருநிறைவும் இதற்கு உண்டு என்றாலும், இந்த நாற்பதாண்டு கால அரசு ஊழியர் வரலாற்றில் 20 ஆண்டுகளாக பழைய ஓய்வூதியத் திட்டமே மேலானது என்று அரசாங்கத்திடம் அதைக்கேட்டு போராடி வருகிறோம்.

கடந்த இருபது ஆண்டுகளாக நம்முடைய தொடர் போராட்டம் காரணமாக நம்முடைய வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக முதல்வர் அவர்கள் ஒப்புக்கொண்டாலும் இன்றுவரை அது நிறைவேறாமல் இருப்பது ஊழியர்களிடையே மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. அரசை நிர்ப்பந்திக்க, ஒப்புக்கொண்ட உரிமைகளை முழுவதுமாக பெற்றிட கடுமையான போராட்டங்கள் மட்டுமே நமக்கிருக்கின்ற ஒரே பலம் ஆயுதம். அதை இந்த அமைப்புதினத்தில் அழுத்தி பதிவுசெய்ய வேண்டியுள்ளது.

இரயில் வண்டியின் இயக்கமும் சங்க ஸ்தாபனத்தின் இயக்கமும் ஏறக்குறைய ஒரேமாதிரியானதே. ஒரு ரயில் வண்டி இயங்க வேண்டுமெனில் அதன் கட்டமைப்பிலிருந்து அனைத்து செயல்பாட்டிற்கும் பல அம்சங்கள் அடிப்படையாக உள்ளது. அதாவது, இரயில் எஞ்சினை இயக்கும் ஓட்டுநர், கார்டு(Guard), பரிசோதகர், அட்டண்டர், சிக்னல்மேன், கேட்கீப்பர் என பலரின் பங்களிப்போடு ரயில் பயணிக்கிறது..

இவற்றோடு ரயிலின் இயக்கத்திற்கு மிகவும் அவசியமானது ரயில் தண்டவாளம், அதற்குக் கீழே உள்ள குறுக்குக் கட்டைகள் அதன்கீழே உள்ள ஜல்லிக் கற்கள், தண்டவாளத்தை கட்டையோடு இணைக்கிற கிளாம்புகள் என உள்ள இந்த கட்டமைப்புகளே அதேபோல ஒரு ஸ்தாபனம் முறையாக இயக்க வேண்டுமெனில் அதற்கு அத்தியாவசியமானது செயலூக்கத்துடன் கூடிய நிர்வாகக் கட்டமைப்பே. அதாவது ரயில் வண்டி என்கிற ஸ்தாபனம் முறையாக இயங்க வேண்டுமெனில் அதன் கீழே இருக்கிற மாவட்ட மையம் என்ற தண்டவாளமும் அதற்கு கீழே குறுக்கு கட்டைகளாக இருக்கிற வட்ட மையங்களும், அதைப் பிணைத்திருக்கிற கிளாம்புகளாக உள்ள மாவட்ட, வட்ட நிர்வாகிகளும், அதற்குக் கீழே ஜல்லிக் கற்களாக உள்ள முன்னணி ஊழியர்களும் என்ற வலுவான கட்டமைப்பே ரயில் வண்டியின் பயணம் செய்யும் பயணிகளின் பாதுகாப்பான பயணத்தை உத்தரவாதப்படுத்துவது போல ஸ்தாபனத்தின் முறையாக செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருக்கும்.

இந்த அடிப்படையில் நாம் ஸ்தாபன கட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் ஸ்தாபனத்தின் செயல்பாட்டை மேம்படுத்தி ஒரு போர்க்குணமிக்க அமைப்பாக இயக்க முடியும் என்பது நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான அம்சமாகும்.

ஒரு அமைப்பின் விலைமதிக்க முடியாத செல்வங்கள் சரியான முறையில் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்கள் தான். யார் இடையூறுகளைக் கண்டு ஓடி ஒளியாது,

அஞ்சி நடுங்காது, அவைகளை வெல்வதற்கும், களைந்தெறிவதற்கும் தயாராக நின்று அந்த இடையூறுகளை நேரடியாகச் சந்திக்கிறார்களோ, அவ்வாறு இடையூறுகளை எதிர்த்துப் போராடுபவர்களால்தான் வெல்ல முடியும். அது தனி மனிதனால் சாத்தியமல்ல. அத்தகைய தோழர்களின் சங்கமமே சாதிக்கும்.

ஒரு இயக்கத்தின் பாதை என்பது நேரான அல்லது எளிமையான தன்மை கொண்டதல்ல அது கரடுமுரடானது, தடைகள் பல நிறைந்தது. இவைகளை உணர்ந்து சரியாக வழிநடத்த, தொலைநோக்கும் மன உரமும் கொண்ட தலைமை தேவை. வெற்றி என்பது தானாகவே கிடைப்பதல்ல. அதை போராட்டங்கள் மூலம்தான் பறித்தெடுக்க முடியும் என்பதை வரலாறுகளும், வாழ்க்கையும் நமக்கு போதித்துக் கொண்டே இருக்கின்றன. தொழிற்சங்க இயக்கத்தில் ஒரு கட்டம்வரைதான் சட்டத்திற்கு உட்பட்ட மனநிலை இருக்க வேண்டும். சமூக மாற்றத்திற்கான போராட்டத்தின் ஒரு பகுதியே உடனடிக் கோரிக்கைக்கான போராட்டம். எனவே வாழ்க்கைக்காகப் போராடுவதும் போராடுவதற்காக வாழ்வதும் தவிர்க்க இயலாதது. உழைக்கும் மக்களுடைய இயக்கங்களிலிருந்து ஒதுங்கி நிற்பதோ ...அன்றி செயல்பாடுகளிலிருந்து பிரிந்து நிற்பதோ அரசு ஊழியர்களுக்கோ அல்லது அவர்களுடைய அமைப்புகளுக்கோ ஏற்ற நடைமுறைகளல்ல. அரசு ஊழியர்கள், கரத்தால் உழைக்கும் மக்களோடிணைந்த கருத்தால் உழைக்கும் ஒரு பிரிவினர்தான்.

இன்று எங்கு பார்த்தாலும் யோகா, மனவளக்கலை என பயிற்சிக்கூடங்களை முதலாளிகள் நடத்துகிறார்கள். எதற்காக...? கோபங்கள், போர்க்குணங்கள், சோர்வுகள் நீக்கி சுத்திகரிக்கப்பட்ட தொழிலாளிதான் அவர்களுக்குத் தேவை. தடையற்ற உற்பத்திக்கு தோதான தொழிலாளி தயாரிக்கப்படுகிறான். அதன்காரணமாக அவனுக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு போன்றவை தடுக்கப்படும்போது எதிர்க்க முடியாமல் முடக்கப்படுகிறான். கிட்டத்தட்ட அடிமை நிலைக்கு அவன் மாற்றப்படுகிறான்.

இந்த போக்கு அரசு அலுவலகங்களிலும் மெல்ல பரவி வருகிறது. இன்று எனக்கு மட்டும் கிடைத்தால் போதும், நான் மட்டும் தப்பித்துக்கொள்ள ஏதாவது ஓட்டை கிடைக்கிறதா பாருங்கள்... உலகமயம், தனியார் மயம் வந்தால் வந்துவிட்டுப் போகட்டும், நமக்கு பிளாட் டிவியும் தவணையில் காரும் கிடைக்கிறதா பாருங்கள் என்கிற அளவுக்கு சுயநலமிக்கதாக பல ஊழியர்கள் திசைமாறிச் செல்கிறார்கள். அவர்களை சரிப்படுத்தி அவர்களிடம் உள்ள மத்தியதர வர்க்க மனோபாவங்களை நீக்கி புதிய மத்தியதர வர்க்கத்தை உருவாக்க வேண்டிய பெருங்கடமை இந்த அமைப்பிற்கு உண்டு.

ஒரு ஊழியர் வர்க்கப்பார்வை இல்லாமலேயே சங்கத்தை தனக்குத் தேவையான ஊதிய ஏற்றம் மற்றும் இதர படிகளை பெற்றுத்தரும் ஏஜென்ஸியாக பார்க்கும் பார்வை எப்படி வந்தது? அதிகாரிகளுக்கு பயப்படுவதும், போராட்டங்களுக்கு பயப்படுவதுமான குணங்கள் இத்தனை ஆண்டுகால இயக்க அனுபவத்திற்குப் பிறகும் இன்னமும் நம் தோழர்கள் கணிசமானோரிடம் உள்ளதே எப்படி? சில்லறைப் பணப்பயன்களுக்கு பின்னால் மயங்கி தேசத்தின் எதிர்கால நலன்கள் பற்றி சற்றேனும் சிந்திக்காமல் ஆளும் அரசுக்கு ஜால்ரா போடும் சங்கங்களுக்குப் பின்னால் ஏராளமான ஊழியர்கள் நிற்கிறார்களே அது ஏன்? இதற்குக் காரணம், பண்பாட்டு ரீதியான தலையீட்டை தொழிற்சங்க இயக்கங்கள் செய்யத் தவறியதன் விளைவாக அதிகார வர்க்கம் தட்டிக்கேட்க ஆளில்லாத பேட்டை

ரவுடியாக அவர்களை பிக்பாக்கட் அடித்துக்கொண்டு போகிறது.

என்றுமில்லாத அளவுக்கு நாம் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறோம். என்ன வேலை செய்வது? எந்த கட்சியில் இருப்பது? எந்தவிதமாகக் கல்யாணம் செய்து கொள்வது? எந்தவிதமாக குடும்பம் நடத்துவது? எந்தச் செய்தியை நம்புவது? எத்தனைப் பேப்பரை படிப்பது? என்று வாழ்வு ஒரு முற்றான நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. அது இன்னும் கீழே வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆட்சிகளின் துரோகம் என ஊதிப்பெருத்த மலைகளின் கீழே நசுங்கித் துடிக்கிறது.

இதிலிருந்து மீண்டெழ வேண்டுமெனில்,,,? நாம் நமது அமைப்பை இன்னும் பலப்படுத்தியாக வேண்டும். ஊழியர்களின் மனங்களை வெல்ல வேண்டும். அவர்களை முழுமையான தொழிற்சங்க பயிற்சிக்கு உட்படுத்தி போராட்ட களங்களுக்கு தயார்படுத்த வேண்டும். தளராத மனஉறுதிகளை அவர்கள் பெற்றிட நாம் வென்ற உரிமைப் போராட்ட வரலாறுகளை கூறிக்கொண்டே இருக்க வேண்டும். அவர்களை தொடர்ந்து பயிற்றுவித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

நம்முடைய நிலை தெளிவானது. முரண்கள் ஏதுமில்லா அணுகுமுறை. தீர்வு குறித்த தெளிவு, காலம் எதிர்பார்க்கிற கடப்பாடு, ஊழியர் நலன், மக்கள் மீது அக்கறை, தொழிற்சங்க உரிமை... போன்ற கோட்பாடுகளில் உறுதியாக நின்றே எந்தப்பிரச்னையையும் அணுகுகிறோம். சங்கங்களைப் பொறுத்தவரை மாநிலத்திற்கு மாநிலம் ஒரு நிலை என்பது இல்லை. ஒரே உறுதியான நிலைதான் எல்லா மாநிலங்களிலும். உழைக்கும் மக்களுக்கு உண்டானதை வழங்காமல் அதைச் சுரண்டி தின்று கொழுத்திருக்கும் ஆதிக்க சமுதாயத்தை அடித்து வீழ்த்தும் வல்லமையும், ஒருமைப்பாடும், உழைக்கும் மக்களுக்கான உரிமைகளை காப்பதுவும், இழந்த உரிமைகளை மீட்பதுவுமான வலிமையான போராட்டங்களும், உறுதிப்பாடுகளும்தான் இன்றைய இன்றியமையாதத் தேவைகளாகியுள்ளன.

மக்களை ஒருமுகப்படுத்தி நேர்மையான, நியாயமான உரிமைகளுக்காக அவர்களை போராட வைக்கவும், அரசுகளை தன் காலடியில் வீழ்த்தியிருக்கும் சர்வாதிகார கார்ப்பரேட்டுகளின் திமிரை அவர்களுக்கு கைகட்டி சேவகம் செய்கிற அரசியல் வாதிகளை அப்புறப்படுத்தி சமதர்ம சமத்துவ ஜனநாயகத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இன்றிலிருந்து அடியெடுத்து வைப்போம். நம்முடைய முன்னோடித் தோழர்கள் பெற்றுத்தந்த உரிமைகளை எப்பாடு பட்டேனும் காப்போம் என்ற உறுதியை இந்த அமைப்பு தினத்தில் சூளுரைப்போம். புதிய புதிய போராட்டங்களை செய்துகொண்டே இருப்போம்.

நாம் இதுவரை பெற்ற உரிமைகள் அனைத்தும் அரசின் கருணையால் அல்ல ஓயாத போராட்டத்தினால் பெற்றோம் என்பதை ஒவ்வொரு ஊழியருக்கும் புரிய வைத்து அவர்களை அமைப்புக்குள் கொண்டு வந்து சேர்ப்போம். இதை நாம் இந்த அமைப்பு தினத்தின் உறுதிமொழியாக ஏற்போம். போராட்டங்கள் பலமானால்தான் உரிமைகள் நம் வசமாகும் என்கிற கோட்பாட்டை நாம் தாங்கிப் பிடித்துக்கொண்டே நம் கொடிகளையும் பதாகைகளையும் தூக்கி நிறுத்துவோம். உயர்ந்து பறக்கட்டும் நம் கொடிகளும், பதாகைகளும். உயரப்பறக்கும் கொடிகளும் பதாகைகளும் வானம் முட்டட்டும். பூட்டி வைக்கப்பட்டிருக்கும் உரிமைகளின் கதவுகள் தானாகவே திறக்கிறதா இல்லையா என்று பாருங்கள். ‘செங்குருதி சிந்தி பெற்ற உரிமைகளை இறுதி மூச்சுவரை உறுதியோடு காப்போம்" ●

கட்டுரை

# ஆகப்பெரிய மூடத்தனம்!

**- ஸ்ரீதர் சுப்ரமணியம்**

பரிணாம வளர்ச்சியை தசாவதாரத்துடன் ஒப்பிட்டு 'நாங்கள்லாம் அப்பவே அப்படி!' என்று சொல்லும் முயற்சிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

உபநிடதத்தில் குவாண்டம் தியரி இருக்கிறது, மகாபாரதத்தில் டெஸ்ட் ட்யூப் பேபி உருவாக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொல்லும் விஷயங்கள். என்னைப் பொருத்தவரை இது மிகவும் சோகமான அணுகுமுறை.

அறிவியலை தனது போட்டியாக கருதி 'நானும் ரௌடிதான்' என்று மதங்கள் முயற்சி செய்யும் விஷயம். இந்த விஷயத்தில் இஸ்லாம் மற்றும் கிறித்துவம் கொஞ்சம் தேவலாம் என்றுதான் தோன்றுகிறது. இந்து மதம் ரொம்ப மோசம். ஜெனடிக் இன்ஜினியரிங் முதல் ரிலேட்டிவிட்டி தியரி வரை இந்து மதம் ஆட்டையைப் போடாத விஷயமே இல்லை என்னும் அளவுக்கு பரிதாபமாக திரிந்து கொண்டிருக்கிறது.

சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு வரை உலகம் எப்படித் தோன்றியது, மானுடத்தின் நோக்கம் என்ன போன்ற கேள்விகளுக்கு தேவையும் முகாந்திரமும் இருக்கவில்லை. காரணம் மிக எளிய வாழ்வுதான் நமக்கெல்லாம் சாத்தியமாக இருந்தது. வெறுமனே தேடிச்சோறு நிதம் தின்று, பல சின்னஞ்சிறு கதைகள் பேசிக் கொண்டு, கடைசியில் கொடும் கூற்றுக்கு இரையென அனைவரும் வீழ்ந்து கொண்டுதான் இருந்தோம்.

சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன் விவசாயம் தோன்றியது. சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன் வேளாண்-சார்ந்த வாழ்வு முறை பலருக்கு உழைப்பு தேவையில்லாத வாழ்வு முறையை ஏற்படுத்திக் கொடுத்தது. அது பற்பல வாய்ப்புகளை மானுடர்களுக்கு வழங்கியது. சும்மா உட்கார்ந்து தின்று கொண்டிருந்தவர்களுக்கு பல சிந்தனைகள், கேள்விகள் துளிர் விட்டன. இந்த உலகம் எப்படி உருவானது, ஜீவராசிகள் எப்படித் தோன்றின, மானுட வாழ்வின் நோக்கம் என்ன போன்ற சிக்கலான சிந்தனைகள், கேள்விகள் துளிர்த்தன. இந்தக் கேள்விகளை உலகின் அனைத்து பண்டைய சமூகங்களும் கேட்டு அவற்றுக்கு தத்தமது பாணியில் கற்பனையில் துளிர்த்த விடைகளை அளித்து அவற்றை எழுத்தில் வடித்தன.

இவை எதுவுமே கண்ணால் சுற்று முற்றும் பார்த்த விஷயங்களை வைத்து, மனதில் யோசித்து எழுதியவை. சில சிந்தனைகள் ஏற்கனவே வழக்கில் இருந்த கதைகள் அல்லது நம்பிக்கைகளை பட்டி டிங்கரிங் செய்து எழுதியவை.

மத்திய ஐரோப்பிய பழங்குடிகளிடையே இருந்த ஒரு நம்பிக்கை உடலுக்குள் ஒரு சக்தி இருக்கிறது. உயிர் பிரிந்தால் அது நம்மை விட்டுப் பிரிந்து வேறு உலகுக்குப் போகிறது என்பது. இதுவேதான், ஆத்மா, பரமாத்மா என்று இந்திய சிந்தனையானது. அதுபோலவே பண்டைய மத்திய கிழக்கு பழங்குடிகள் இடையே கடவுள் ஒரு மாடல் ஆணையும் பெண்ணையும் உருவாக்கி அவர்களிடம் இருந்து மானுட குலத்தை உருவாக்கினான் எனும் நம்பிக்கை பல மாற்றங்கள் கொண்டு ஆதாம் ஏவாள் கதையாக பைபிளில் இணைந்தது. அரேபிய தீபகற்பத்தில் வாழ்ந்து வந்த நெஸ்டோரியன் கிறித்துவர்களிடையே இருந்த மத நம்பிக்கைகள், கதைகள் குர்-ஆனில் இடம் பெற்று முஸ்லிம் நம்பிக்கைகளாக உருப்பெற்றன. இப்படித்தான் பல்வேறு பழங்குடிகளின் கதைகள், நம்பிக்கைகள், கற்பனைகள்தான் புனித நூல்களாக மாறின. மத நம்பிக்கைகளாக உருப்பெற்றன.

இவை அனைத்துமே அழகியல் கொண்ட சுவாரசியமான கதைகள் என்பதில் மாற்றுக் கருத்தே கிடையாது. ஆனால் அவை

அனைத்துமே கதைகள் மட்டுமே. ஒரு சதவிகிதம் கூட உண்மை இல்லாத கற்பனைகள்.

இதற்கு தசாவதாரமும் விதிவிலக்கல்ல. அது ஒரு அழகிய கற்பனை மட்டுமே. பரிணாம வளர்ச்சியை எந்த விதத்திலும் அது சுட்டுவதில்லை. பரிணாம வளர்ச்சியில் ஆதி உயிர் என்பது கடலில் *Cambrian Explosion* எனும் காலகட்டத்தில் உருவானது. தசாவதாரத்தின் முதல் அவதாரம் கடல் வாழ் உயிரினம் என்பது ஒரு தற்செயல் மட்டுமே. அது கூட ஆமை என்றுதான் தசாவதாரம் சொல்கிறது. *Cambrian Explosion* நடந்த போது ஆமை கிடையாது. அதற்குப் பின் சுமார் 250 மில்லியன் ஆண்டுகள் கழித்துதான் ஆமைகள் உருவாகின.

போலவே, மானுடப் பரிமாண வளர்ச்சியில் *primates* எனப்படும் மனிதக் குரங்குகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் அது தசாவதாரத்தில் இல்லை. பரிணாம வளர்ச்சியில் பல்வேறு மனித இனங்கள் உருவாகின. நியன்டர்தால், டெனிசோவன், சேப்பியன் என்றெல்லாம் மனிதக் குரங்கு இனங்கள் வந்தன. அவற்றில் இதர இனங்கள் அழிபட்டன. கொஞ்சம் தப்பிப் பிழைத்த சேப்பியன்கள் இன்றைய நவீன மனிதர்களாக மாறி இருக்கிறோம். இந்த மாற்றங்கள் குறித்த எந்தக் குறிப்பும் தசாவதாரத்தில் கிடையாது.

நவீனப் பரிணாம வளர்ச்சித் தியரி என்பது டார்வினுக்கு மட்டும் சொந்தம் அல்ல. அவர் வெறுமனே கோடு மட்டும்தான் போட்டார். அதற்குப் பின் பலர் அதில் ரோடு போட்டு வைத்திருக்கின்றனர். ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளின் ஆண்டாண்டுகளான ஆராய்ச்சிகள் மற்றும் கடுமையான உழைப்பில் பல்வேறு ஆதாரங்களை சேகரித்து, அவற்றை கவனமாக பரிசீலித்து, விவாதங்கள் நடத்தி பல்வேறு பரிசோதனைகளை செய்து, அவற்றில் தோல்வியுற்றவற்றை ஒதுக்கி மீண்டும் மீண்டும் தோல்விகளைக் கண்டும் மனம் நொந்து போகாமல் ஆய்வுகளில் ஈடுபட்டு அவற்றின் விளைவாக உருவாக்கிய துறை. அறிவியலின் கடுந்தவம் என்பதற்கு உதாரணமாக திகழும் துறை. மானுட சாதனைகளின் உச்சம். சொல்லப் போனால் இந்த உலகம், அதன் உருவாக்கம், உயிர்கள் குறித்து சிந்திக்கத் துவங்கிய அந்த முகமற்ற பண்டைய பழங்குடிகளின் வாரிசுகள்தான் இன்றைய பரிணாம உயிரியல் விஞ்ஞானிகள் என்றே சொல்லலாம்.

ஆனால் நவீன மானுடர்கள் பலருக்கு பண்டைய கற்பனைக் கதைகளை எழுதிய அந்தப் பழங்குடிகளுக்கு இருந்த ஆர்வம் மற்றும் வேகம் கூட இல்லை என்று தெரிய வருகிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் கொடுத்து விட்டுப் போன கற்பனைக் கதைகளை தொடர்ந்து அசை போட்டுக் கொண்டு தாங்கள் சொந்த மூளையை துருப்பிடிக்க வைத்துக் கொண்டு வாழ்வதன் விளைவுதான் 'எல்லாம் எங்க புத்தகத்திலேயே இருக்குதே!' எனும் வாதம். இது ஆகப்பெரிய மூடத்தனம் மட்டுமல்ல. ஆகப்பெரிய சோம்பேறித்தனமும் கூட.

பண்டைய பழங்குடிகளின் கதைகளை அழகிய இலக்கியங்களாக அணுகி ரசியுங்கள். அவர்களின் கற்பனைகளைப் போற்றுங்கள். ஆனால் அவற்றை புனித நூல்களாக எண்ணி அறிவியல் உண்மை ரேஞ்சுக்கு கொண்டு போகாதீர்கள். மூளை துருப்பிடித்து விடும். ●

## "பஞ்ச்"

மொரப்பா

**"அ" வுக்கு அடுத்து "ஆ" வருவதேன்?**

**அரசனும், ஆண்டியாகலாம் என்பதை அறிந்திட!!**

**"இ" வுக்கு அடுத்து "ஈ" வருவதேன்?**

**இருப்பவன், ஈய வேண்டும் என இயம்பிட!!**

**"உ" வுக்கு அடுத்து "ஊ" வருவதேன்?**

**உழைப்பே ஊக்கம் என உணர்த்திட!!**

# நேசியுங்கள்! அதற்குமுன், வாசியுங்கள்!

ஆயிரம் புத்தகங்கள் வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள்; அவனே எனது வழிகாட்டி என்றார் ஜூலியஸ் சீசர்.

ஹைதர் அலி தன் மகன் திப்பு சுல்தானிடம் உனக்கு உன் கல்யாணத்திற்க்கு என்ன பரிசு வேண்டும் என்று கேட்க அதற்கு உலகில் உள்ள தலைசிறந்த புத்தகங்கள் வேண்டும் என்றார் திப்பு சுல்தான்.

ஒரு கோடி ரூபாய் இருந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, ஒரு நூலகம் கட்டுவேன் எனப் பதில் அளித்தார் காந்தியடிகள்.

தனிமைத் தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவிட்டு வருவேன் என்றார் ஜவஹர்லால் நேரு அவர்கள்.

மனிதனின் ஆகச்சிறந்த கண்டுபிடிப்பு எது என்று வினவப்பட்டபோது, சற்றும் யோசிக்காமல், புத்தகங்கள் என பதில் அளித்தார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

வேறு எந்தச் சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றார் நெல்சன் மண்டேலா.

பிறந்தநாளுக்கு என்ன வேண்டும் என்றுக் கேட்டபோது, சற்றும் யோசிக்காமல் புத்தகங்கள் வேண்டும் என்றார் லெனின்.

ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக்கொள்ளும் போது வரும் முன்பணத்தில், பத்து சதவிகிதத்திற்கு புத்தகங்கள் வாங்குவார் சார்லி சாப்ளின்.

ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித் தரும் ஆகச்சிறந்த பரிசு புத்தகங்கள் தான் என்றார் வின்ஸ்டன் சர்ச்சில்.

பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் எவை எனக் கேட்கப்பட்டபோது, புத்தகங்கள் தான் என்றார் மார்ட்டின் லூதர் கிங். தான் தூக்கில் இடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரைக்கும் லெனின் எழுதிய 'அரசும் புரட்சியும்' என்ற நூலை வாசித்துக்கொண்டு இருந்தார் பகத்சிங். மரணிக்கப்போகும் கடைசித் தருவாயில் ஏன் வாசித்துக் கொண்டு இருக்கிறாய் எனக் கேட்டபோது, சாகும் போது முட்டாளாக சாக விரும்பவில்லை. எதையாவது கற்றுக்கொண்டேன் என்ற நிறைவுடன் சாக விரும்புகிறேன் என்றார் அந்த இளம் புரட்சியாளர்.

நான் வாசிக்காத புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னை சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன் என்றார் ஆபிரகாம் லிங்கன்.

தான் தேடிய புத்தகம் ஒன்று, பல மைல் தொலைவில் உள்ளது என்பதை அறிந்துக்கொண்டு, அங்கே சென்று அந்தப் புத்தகத்தை வாசித்தார் ஆபிரகாம் லிங்கன்.

புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விட, புத்தகங்களே பெரிய ஆயுதங்கள் என்றார் லெனின்.

உண்மையான வாசகன் வாசிப்பதை ஒருபோதும் முடிப்பதே இல்லை என்றார் ஆஸ்கார் வைல்டு.

நாற்பத்தி எட்டு பக்கங்கள் மட்டுமே கொண்ட 'காமன் சென்ஸ்' என்ற புத்தகம் தான், அமெரிக்க விடுதலைப் போரை வீறுகொண்டு எழச் செய்தது.

'அங்கிள் டாம்ஸ் கேபின்' என்ற நூல் தான் அமெரிக்கர்களின் மனசாட்சியை தட்டி எழுப்பி கருப்பு இனத்தவர்களின் துயரத்தை உணர்ந்து கொள்ளவும், உள்நாட்டுப் போருக்கும் விதையாக அமைந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்கள், தான் இறக்கும் தருவாயில் கூட, மேரி கரோலியின் 'தி மாஸ்டர் கிரிஸ்டியன்' என்ற நூலை வாசித்துக் கொண்டு இருந்தார். இதைப் படித்துவிட்டு செத்துப் போகலாம் என அவர் சொன்னது தான் உச்சம்.

அம்பேத்கர் லண்டனில் தங்கி இருந்த போது, நூலகத்திற்கு உள்ளே நுழைகின்ற முதல்

ஆளாகவும், நூலகத்தை விட்டு வெளியே வருகின்ற இறுதி ஆளாகவும் அவரே இருப்பார்.

உலகப் புகழ்ப்பெற்ற லண்டன் அருங்காட்சியக நூலகத்தில் உள்ள புத்தகங்களின், லட்சக்கணக்கான பக்கங்களை வாசித்த இருவரின் படங்கள் அந்த நூலகத்தில் வைக்கப்பட்டு உள்ளது. ஒருவர் கார்ல் மார்க்ஸ். மற்றொருவர் அம்பேத்கர்.

பெண்களின் கையில் இருக்கின்ற கரண்டியை பிடுங்கிவிட்டு புத்தகங்களைக் கொடுங்கள் என்றார் தந்தைப் பெரியார்.

நம் சமகால அரசியல் தலைவரான வைகோ அவர்கள், ஐந்து வருடத்திற்கும் மேல் மக்கள் நலப் போராட்டங்களுக்காக சிறையில் இருந்தவர். பல்வேறு தருணங்களில் எம்பியாக இருந்த அவருக்கு, இயல்பாக சிறையில் கிடைக்க வேண்டிய மின்விசிறி, முதல் வகுப்பு அறை, உணவு உள்ளிட்ட எதையும் அவர் பயன்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக, மறுத்துவிட்டார். ஆனால், சிறைக்கு வெளியில் இருந்து தான் விரும்பிய புத்தகங்களை வரவழைத்தார். மலை போல் குவிக்கப்பட்டு இருந்த புத்தகங்களை இரவு முழுவதும் வாசித்துக் கொண்டும், தொண்டர்களுக்கு உலக வரலாறுகளை கடிதத்தின் வாயிலாக எழுதிக் கொண்டும் சிறை வாழ்வை கழித்தார்.

புத்தகங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு தான், மைனராக இருந்த சமூகம் மேஜராக ஆனது என்றார் வார்த்தை சித்தர் வலம்புரி ஜான்.

உலகம் போற்றும் மனிதர்களாக இருந்தவர்கள் புத்தகங்கள் குறித்து தெரிவித்த கருத்துக்கள் தான், மேலே உள்ளவை. இதன்மூலம், வாசிப்பின் அவசியத்தை ஓரளவு உணர்ந்து கொள்ள முடியும்.

'மழைக்கு மட்டும் தான் பள்ளிக்கூடம் ஒதுங்கினேன். அப்போதும் கூட மழையையே பார்த்துக்கொண்டு இருந்தேன்' என்றார் கி. ராஜநாராயணன். பள்ளிக்கூடம் கூட படிக்காத, அந்தக் கரிசல்காட்டு எழுத்தாளர் கி.ரா -வை புதுவைப் பல்கலைக்கழகம் ஒரு துறைக்கு தலைவராக ஆக்கி கௌரவித்தது. அவரின் கதைகள், சிறுகதைகள் பல பல்கலைக்கழகங்களில் பாடங்களாக உள்ளது. அவரின் எழுத்தை ஆய்வு செய்து பட்டம் வாங்கியவர்கள் பலர்.

பள்ளிப் படிப்பும், பல்கலைக்கழக படிப்பும் மட்டுமே ஒரு மனிதனுக்கு போதுமானதா என்றால், இல்லை என்பது தான் உண்மை. அதையும் தாண்டிய வாசிப்பு தான் வாழ்வின் நுட்பத்தை புரிந்துக் கொள்ளவும், உணர்ந்துக் கொள்ளவும் உதவும்.

ஒரு புத்தகத்தை வாசிப்பதற்கு முன்பு இருந்த மனிதன், அந்த புத்தகத்தை வாசித்து முடித்தப் பிறகு வேறானவனாக ஆகின்றான். ஒரு கதை ஒன்று உண்டு.

வகுப்பறையில் ஒரு தவளையை வைத்துப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். சுற்றி மாணவர்கள் நின்றுக் கொண்டிருந்தார்கள். நான்கு கால்கள் கொண்ட அந்த தவளையைப் பார்த்து, ஜம்ப் என்றார் ஆசிரியர். தவளையும் குதித்தது. தவளையின் ஒரு காலை வெட்டிவிட்டு மீண்டும் ஜம்ப் என்றார் ஆசிரியர். மூன்று கால்களுடன் இருந்த தவளை அப்போதும் குதித்தது. மீண்டும் ஒரு காலை வெட்டிவிட்டு ஜம்ப் என்றார் ஆசிரியர். அப்போதும் இரண்டு கால்களுடன் சிரமப்பட்டு தவளை குதித்தது. மீண்டும் ஒரு காலை வெட்டிவிட்டு ஜம்ப் என்றார் ஆசிரியர். ஒரு காலுடன் இருந்த தவளை குதித்தது. கடைசியாக இருந்த ஒரு காலையும் வெட்டிவிட்டு, ஜம்ப் என்றார் ஆசிரியர். தவளையால் குதிக்க முடியவில்லை. அப்போது, மாணவர்களைப் பார்த்து ஆசிரியர் கேட்டார். 'இதில் இருந்து உங்களுக்கு என்ன தெரிகிறது' என்றார். நான்கு கால்களையும் வெட்டி விட்டால் தவளைக்கு காது கேட்காது என்றார்கள் மாணவர்கள்.

இந்தக் கதை, நாம் 'புரிந்துக்கொள்வதில்' உள்ள பிரச்சனையை நமக்கு உணர்த்துகிறது. வாழ்வின் நுட்பங்களை புரிந்து கொள்ள பரந்த வாசிப்பு அவசியம். தவளைக் கதையில் வரும் மாணவர்களைப் போல, நம்மால் புரிந்துக் கொள்ளப்படாமல் இருப்பவை பல. புரியாதவற்றை புரிந்துக் கொள்ள வாசிப்பு நமக்கு உதவும். புத்தக வாசிப்பை நேசிக்கின்ற சமூகம் தான் மேன்மையுறும். மதிக்கப்படும்.

வாசிப்பை நேசிப்போம்!

(வாட்ஸ்ஆப் விருந்து)

கட்டுரை

# சென்னை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

**- ஞானகுரு**

தமிழ் நாட்டில் அரசு ஊழியர் மத்தியில் ஒரே சங்கமாக இருந்த அரசு அலுவலர் ஒன்றியம் ஆளும் அரசுக்கு துதிபாடும் அமைப்பாக, அந்த அமைப்பிற்குள் ஊழியர்கள் 8 அகவிலைப் படியை இழந்து 1969 இல் அகில இந்திய சராசரியில் ஊதியம் வாங்குபவர்களில் இரண்டாம் இடத்தில் இருந்த நாம் 26 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டோம். இதற்கு ஏதாவது செய்தாகவேண்டும் என்று மாவட்ட, மாநில செயற்குழுவில் குரல் எழுப்பினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து சங்கத்திலிருந்து நீக்குவது, ஆட்சியாளர்களுடன் உள்ள நெறுக்கத்தைப் பயன்படுத்தி அவர்களைத் துறை ரீதியாக பழிவங்குவது போன்ற நடவடிக்கையில் அன்றைய என்ஜிஓ யூனியன் தலைவராக இருந்த சிவஇளங்கோ அவர்கள் இறங்கியதால் அரசு ஊழியர்களின் நலனுக்காக செயல்படும் ஒரு அமைப்பு தேவைப்பட்டது. அதனடிப்படையில் எம்ஆர்அப்பன் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு மதுரையில்06-05-1984 இல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உதயமானது. உதயமானபின் 23-05-1984 இல் சேப்பாக்கத்தில் முதல் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அது மிகக் குறைந்த அளவிலான முன்னணி உறுப்பினர்களைக் கொண்ட கூட்டமாக இருந்தது. அடுத்த நாளே தோழர்கள் எம்ஆர்.அப்பன், சீதரன், பி.செல்லசுவாமி, கணேசபிள்ளை, நான், எஸ்.விஜயன்,எஸ்.எல். முத்துக்குமார்,சி.மூர்த்தி மற்றும் தோழர்களைக் கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அதில் உட்னடியாக ஒவ்வொரு அலுவலமாகச் செல்வது, சென்று சென்னை நகரில் என்ஜிஓயூனியன் நடவடிக்கைக் குழுவில் தீவிரமாக செயல்பட்ட தோழர்களைச் சந்தித்து அவர்களின் ஆதரவைக் கோருவது என்று திட்டமிட்டோம். சென்னை நகரில் நடவடிக்கைக் குழு நிவாகியாக தோழர். பி. செல்லசுவாமி இருந்து திறம்பட செயல்பட்டதால், சென்னை நகரில் அரசு ஊழியர் மத்தியில் மிகவும் அறியப்பட்ட தோழராகவும் இருந்தார். அவருடன் தினமும் ஒவ்வொரு அலுவலமாகச் சென்று அந்த அலுவலகத்தில் அவருடன் அறிமுகமான ஒவ்வொருவரையும் சந்தித்து முன்னணி ஊழியர்களை உருவாக்குவதில் மிகவும் அக்கறை கொள்வார்.

தோழர்.செல்லசுவாமி நாகர்கோவில் நடையில் பேசுவார் உரையாற்றுவார். கூட்டங்களில் பேசும்போதும், ஒவ்வொருவரைச் சந்திக்கும்போதும் அன்றாட அரசியலைப் பேசுவார். நிர்வாகிகள் கூட்டத்திலும், செயற்குழுக்கூட்டத்திலும் முன்னணி ஊழியர்களை உருவாக்குவது பற்றியே இருக்கும். சென்னைக்கு நான் புதிது ஒவ்வொரு அலுவலகத்திலும் யாராவது ஒருவர் அவருக்குத் தெரிந்தவராக இருப்பார் அவர்களுடன் எங்களை அறிமுகப்படுத்தும் அழகே தனியானது. அடுத்து நடக்கும் கூட்டத்திற்கு முன் அவரைப் பார்த்தீர்களா ? தொடர்ந்து விடாமல் பாருங்கள் என்பார். சர்வீஸ் கமிசன் அலுவலகத்தில் பணியாற்றிவந்த தோழர் சீனிவாசனை எனக்கு அறிமுகம் செய்துவைக்கும் போது, அவர் சென்னை மாவட்ட என்ஜிஓயூனியன் தலைவராக செயல்பட்ட தோழர். அவர் நடவடிக்கைக் குழுவில் தீவிரமாக எம்.ஆர்.அப்பனுடன் இணைந்து செயல்பட்டதால் சிவஇளங்கோவின் தூண்டுதலால் அலுவலக மேலாளராக இருந்தவரை தட்டச்சராக பணியிறக்கம் செய்யப்பட்டார் என்று கூறினார். அடுத்து அண்ணாசாலையில் உள்ள எழுது பொருள் அச்சகத்துறையில் பணியாற்றிவந்த மூத்த தோழர்.ரெங்கநாதன்அவர்களை அறிமுகம் செய்துவைத்து இவரும் அன்றைய என். ஜி.ஓ.யூனியன் நடவடிக்கைக் குழுவில் தீவிரமாக செயல்பட்ட தோழர். இவரையும்

சிவஇளங்கோவின் தூண்டுதலால் அலுவலக மேலாளராக இருந்த தோழரை கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டார் என்று கூறினார். பின்னர் செய்த மேல்முறையீடு தொடர்ந்து ஏற்பட்ட ஆட்சி மாற்றம் ஓரளவிற்கு நிவாரணம் கிடைத்தது. இந்த இரு செய்தியையும் கேட்டு அதிர்ந்தே போனேன். அந்த நாட்களில் அரசு ஊழியர் மத்தியில் சங்கவேலை செய்வது என்பது மிகச் சவாலான ஒன்றாக இருந்தது. 80களுக்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் சூழல், அரசு ஊழியர் மத்தியில் தொடர்ந்து ஏற்படுத்திய விளிப்புணர்வு மற்றும் அர்சியல் மாற்றம் எல்லாம் சேர்ந்து சனநாயக உணர்வை மேம்படுத்தியது.

அதற்குப்பின் அரசு ஊழியர் மத்தியில் முன்னர் இருந்த தயக்கம் எல்லாம் மாறி சங்க நடவடிக்கைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. ஆர்ப்பாட்டம், ஊர்வலம், உண்ணாவிரதம், தர்ணா மறியல் வேலைநிறுத்தம் என்று உயர்ந்தது. அதேபோல் ஊதியநிலைமையிலும் பெரும் மாற்றம் காணமுடிந்தது.

தற்போது தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்பதின் பெயரால் உழைக்கும் மக்களின் மீது பெரும் தாக்குதல்களைத் தொடுக்கின்றன. ஒன்றிய, மாநில அரசுகளும் நமது உரிமைகள் மீது கைவைத்து வருகின்றன. நம் ஊழியர்களுக்குள்ளேயே பழைய ஓய்வூதியம் பெறப்போவோர், புதிய ஓய்வூதியம் பெறப்போவோர் என பிளவை உருவாக்கும் சூழலை அரசே உருவாக்குகிறது.

நாம் அயர்ந்தால் 80களுக்கு முன் அரசு ஊழியர்களுக்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும். எனவே தற்போது ஏற்பட்டுள்ள சூழலை உள்வாங்கிக்கொண்டு, தோழர் செல்லசுவாமி காட்டிய வழியில் ஒவ்வொரு அலுவலகமாகச் சென்று அரசு ஊழியகளைச் சந்திப்பது. முன்னணி ஊழியர்களை உருவாக்குவது மேலும் வலுவாக அமைப்பைக் கட்டி எழுப்புவது என்ற செயலாக்கத்தில் இறங்குவதே ஒவ்வொருவரின் கடமையாகும்.

நாற்பதாண்டை நிறைவு செய்யும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். வாழ்க! வளர்க!

ஓங்குக உழைக்கும் மக்கள் ஒற்றுமை! ●

## எதை சுமக்கிறோம் என்பதல்ல; எவ்வாறு உணர்கிறோம் என்பது முக்கியம்!



இரண்டாம் உலகப் போரின் போது 1945-ல் அமெரிக்க புகைப்படக் கலைஞர், ஜோ ஓ டோனல் என்பவர் எடுத்த புகைப்படம்.

ஒரு ஜப்பானிய சிறுவன் ஒரு தகனம் / அடக்கம் செய்யும் இடத்தில், இறந்த தனது சிறிய சகோதரனை சுமந்து கொண்டு வரிசையில் நிற்கிறான்.

அழக்கூடாது என்ற வைராக்கியத்துடன் கண்ணீரைக் கட்டுப்படுத்த தனது உதடுகளைக் கடினமாகக் கடித்ததால் வழியும் இரத்தம் சிறுவனின் வாயின் ஓரத்தில் சொட்டுகிறது.

“நீ பையில் சுமக்கும் சுமையை என்னிடம் கொடு” என்று காவலர் கேட்டபோது, “சுமப்பதற்கு கடினமாக உணர இது சரக்கு அல்ல, என் சகோதரன்” என்று சிறுவன் பதில் அளித்ததாக புகைப்படம் எடுத்தவர் பதிவு செய்திருக்கிறார்.இன்றைக்கும் ஜப்பானில்,இந்த புகைப்படம் வலிமையின் அடையாளமாக பயன்படுத்தப்படுகிறது.

ஆம், எதை சுமக்கிறோம் என்பதல்ல;அதை எவ்வாறு உணர்கிறோம் என்பது முக்கியம். பணம் காசுகளுக்காக உறவினரை ஏமாற்றும், உடன் பிறந்தவரை துண்டிக்கும் இன்றைய தலைமுறைக்கும்

இதில்... பாடம் இருக்கிறது. ●

கட்டுரை

# தியாகச்சிங்கம் உத்தம்சிங்!

## - மனோஹரி

ஜாலியன் வாலாபாக் நினைவு சென்ற மாதம் (ஏப்ரல் 13) வந்து சென்றது.ஜாலியன் வாலாபாக்கில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த ஜெனரல் டையரை நமக்குத் தெரியும்...இந்திய வரலாற்றின் மறக்க முடியாத அந்தக் ஜாலியன் வாலாபாக் கோரச் சம்பவம், 15 நிமிடங்களுக்குள் நடந்தேறியது.1000 பேருக்கும் மேலான மக்கள் ஜெனரல் டயர் என்பவனால், கொன்று குவிக்கப்பட்டனர். 2,000 பேருக்கும் அதிகமானோர் குற்றுயிரும் குலை உயிருமாகத் துடித்துக்கொண்டு இருந்தனர். ஒவ்வொரு துப்பாக்கி வீரனும் 33 ரவுண்ட் சுட்டு இருந்தான். மொத்தம் 1,650 ரவுண்ட் சுடப்பட்டது. செத்து விழுந்த உடல்கள் ரத்த வெள்ளத்தில் மிதந்தன. தப்பிப் பிழைத்தவர்கள், நடக்க முடியாமல் வீதியில் விழுந்து கிடந்தனர்.

"என்னை மதிக்காத இந்தியர்களுக்கு நான் அளித்த தண்டனை இது. ஒரு ராணுவ அதிகாரியாக இந்தச் செயலுக்காக நான் சந்தோஷம் அடைகிறேன். என்னிடம் இன்னும் அதிக ஆயுதங்கள் இருந்திருந்தால், அதிக நேரம் சுட்டிருப்பேன்' என்று வெளிப்படையாகத் தெரிவித்தான் ஜெனரல் டயர்.இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் 'மார்னிங் போஸ்ட்' என்ற பத்திரிகை ஜெனரல் டயரை 'வெற்றி நாயகன்' என்று பாராட்டி எழுதியது. ஜாலியன் வாலாபாக் படுகொலை, இந்தியாவை உலுக்கியது. அந்தப் பாதகச் செயலுக்கு காரணமாக விளங்கிய பஞ்சாப் கவர்னர் மிக்கேல் ஓ டயர் மற்றும் ஜெனரல் டயர் ஆகியோரைப் பழிவாங்குவேன் என்று, உத்தம்சிங் என்ற பஞ்சாப் இளைஞன் சபதம் செய்தான். சொன்னபடியே சரியாக 21 ஆண்டுகள் காத்திருந்து இங்கிலாந்தில் எச்சில் தட்டு கழுவி, கூலி வேலை செய்து கிடைத்த பணத்தில் துப்பாக்கி வாங்கி 1940-ம் ஆண்டு மார்ச் 13-ம் தேதி கவர்னர் ஓ டயரைச் சுட்டுத் தள்ளினார் உத்தம் சிங். உத்தம் சிங்கின் செயல் இந்திய மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால் இதை “பைத்தியகாரத்தனமான செயல்” என்று கூறி காந்தி அறிக்கை வெளியிட்டார். நேரு மற்றும் பலர் பஞ்சாப் காங்கிரஸ் அரசை, உத்தம் சிங்கின் செயலைக் கண்டித்தும் ஜெனரல் டயரின் மனைவிக்கு ஆறுதல் தெரிவித்தும் தீர்மானம் இயற்ற வைத்தனர். இதனை கடுமையாக எதிர்த்து, உத்தம் சிங்கின் செயலைப் பாராட்டி கடிதம் எழுதினார் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். காந்திக்கும் நேதாஜிக்கும் பிளவு ஏற்பட்டு நேருவின் சதியால் காந்தியால் நேதாஜி காங்கிரசில் இருந்து திட்டமிட்டு இழிவுபடுத்தப் பட இது ஒரு முக்கிய காரணமாகவும் அமைந்தது.

அந்தக் கொலை வழக்கில், உத்தம் சிங்குக்கு தூக்குத் தண்டனை விதித்தது இங்கிலாந்து நீதிமன்றம். "தூக்கில் போட்டவுடன் இங்கிலாந்து மண்ணிலேயே என்னைப் புதைத்து விடுங்கள். இத்தனை ஆண்டுகள் இந்திய மண்ணை இங்கிலாந்து ஆண்டது போல், இங்கிலாந்தின் ஆறடி மண்ணை ஓர் இந்தியன் நிரந்தரமாக அபகரித்துக் கொண்டான் என்பது ஒரு மாறாத அவமானமாக உங்களுக்கு அமையட்டும்"என்று முழங்கினர் உத்தம் சிங். ஜூலை 31, 1940 அன்று அவர் வந்தே மாதர கோஷத்துடன் தூக்குக் கயிறை முத்தமிட்டார். “தியாகச்சிங்கம்” என அழைக்கப்பட்ட அவரது உடல் சீக்கிய மதச்சடங்குகளுக்கு தடை விதிக்கப்பட்டு சிறைச்சாலையில் புதைக்கப்பட்டது. பஞ்சாப் மாநிலம் சுல்தான்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எஸ்.சாது சிங்,“உத்தம் சிங்கின் எலும்புக் கூடுகளையாவது இந்தியாவிற்கு எடுத்து வர வேண்டும்” என்று மைய அரசிடம் கேட்டுக் கொண்டார். அன்றைய பிரதமர் இந்திரா காந்தி இதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர், 1975 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசு உத்தம் சிங் புதைக்கப்பட்ட இடத்தை மீண்டும் தோண்டி, மிச்சம் மீதி எலும்புக் கூடுகளை பொறுக்கிக் கட்டி இந்தியாவிற்கு அனுப்பியது. உத்தம்சிங்கின் எலும்புக்கூடுகள் ராஜ மரியாதையோடு இந்தியாவில் வரவேற்கப்பட்டு, உத்தம்சிங்கின் சொந்த ஊரில் எரியூட்டப்பட்டு, சாம்பல் கங்கை ஆற்றில் கரைக்கப்பட்டது. தேசத்தை நேசிக்கும் அனைவரும் அவரது தியாகத்தைப் போற்றுவோம். எத்தனை பேர் அறிந்திருப்பீர்கள் உத்தம்சிங் பற்றி? இந்த பதிவைப் படித்தறிந்து இக்கால தலைமுறையினரையும் உத்தம் சிங் பற்றி தெரிந்து கொள்ள செய்யுங்கள். உங்கள் குழந்தைகளுக்கு வீர வரலாற்றை உணர்வாக சொல்லிக் கொடுங்கள். ●

# நிலுவை கோரிக்கைகளை நிறைவேற்றாத தமிழ்நாடு அரசைக் கண்டித்து அனைத்து அரசு அலுவலகங்கள் முன்பும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

- மு.அன்பரசு

திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ் நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டாண்டுகள் நிறைவு பெறும் தருவாயில் உள்ளது. இத்தருணத்திலும் மாண்புமிகு முதல்வர் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு தேர்தலுக்கு முன்பு கொடுத்த வாக்குறுதிகள், தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் தெரிவித்த உறுதிமொழிகளில் ஒருசிலவற்றைக்கூட நிறைவேற்ற மனமில்லாமல் இருப்பது அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் அவர் பொருட்டாக மதிக்கவில்லை என்பதையே காட்டுவதாக உள்ளது.

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களோ அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான உரிமைகளை திரும்பத் தர முடியாது என்பதை நேரடியாகவே தெரிவித்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை பார்க்க மறுத்தார். ஆனால் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களோ நம்மை நேரில் அழைத்துப் பேசியும் அமைச்சர்களை வைத்து பொய்யான நம்பிக்கைகளை விதைத்தும் உரிமைகளை தரமுடியாது என்று சொல்வதற்குப் பதிலாக இன்னும் கொஞ்சம் பொறுத்திருங்கள் என்று நம் பொறுமையை சோதித்து வருகிறார்.

கடந்த 20 ஆண்டுகளாக பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டுவர நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தில் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்திய ஜெயலலிதா அம்மையார் கூட நம்முடைய இடைவிடாத போராட்டங்கள் காரணமாக 2011ல் தன்னுடைய தேர்தல் வாக்குறுதியில் அதிமுக ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டுவருவது குறித்து பரிசீலிப்பதாக தெரிவித்து ஆட்சிக்கு வந்து ஐந்து ஆண்டுகள் முடியும் தருவாயில் நம்முடைய அழுத்தங்கள் காரணமாக பழைய ஓய்வூதியத்திட்டத்தை அமல்படுத்துவற்கான சாத்தியக்கூறுகளை ஆராய ஒரு நபர் குழுவை அமைத்தார். அதன்பிறகு அவர் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்ட நிலையில் எடப்பாடி பழனிச்சாமி அதைப்பற்றி கண்டுகொள்ளாத நிலையில் திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் உங்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக நான் இருக்கிறேன். நீங்கள் ஏன் கவலைகொள்கிறீர்கள். திமுக ஆட்சிப் பொறுப்பேற்றால் உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று வானளாவப் பேசினார்.

ஆனால் நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் அரசின் 2023-2024க்கான கொள்கை விளக்கக் குறிப்பில் தற்போது நடைமுறையில் இருந்து வரும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை, தேசிய ஓய்வூதியத் திட்டமாக மாற்றி, ஓய்வூதியத் திட்டத்தில் திரட்டப்பட்ட தொகையை ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தில் முதலீடு செய்வது குறித்து உறுதியான மற்றும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளது அனைத்து அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை (புதிய ஓய்வூதியத் திட்டம்) கைவிட்டுவிட்டு வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தை (பழைய ஓய்வூதியத் திட்டம்) திரும்பக் கொண்டுவரப்பட வேண்டும் என அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் கடந்த இருபது ஆண்டுகளாக போராட்டங்கள் நடத்தி வரும் நிலையில், கடந்த காலங்களில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பக்கம் நின்று நியாயம் கேட்ட மாண்புமிகு தமிழக முதல்வரே தற்போது அதற்கு எதிரான நிலைப்பாடு எடுத்திருப்பது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் பெருத்த ஏமாற்றத்தையும் அவநம்பிக்கையையும் தோற்றுவித்திருக்கிறது. 2021 சட்டமன்றத் தேர்தல் சமயத்தில் மேற்கொண்ட பரப்புரைகளிலும், தேர்தல் அறிக்கையிலும் திமுக அரசு ஆட்சியமைத்ததும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிவிட்டு தற்போது அதற்கு நேர் எதிராக, தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களைக் கொண்டுவரும் நடவடிக்கைகளில் உடனடியாக உறுதியான முடிவு எடுக்கப்படும் என தெரிவித்துள்ளது நம்ப வைத்து கழுத்தறுக்கும் நயவஞ்சகமாகும்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கூட ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி அமைக்கப்பட்ட மூன்று அமைச்சர் பெருமக்களை சந்தித்தபோது கூட அவர்கள் சட்டமன்ற கூட்டத்தொடர் வரை பொறுத்திருங்கள் முதல்வர் நிச்சயமாக உங்கள் கோரிக்கைகளில் சிலவற்றை நிச்சயம் நிறைவேற்றி உத்தரவிடுவார் என்று உறுதியளித்து ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்களிடம் சட்டமன்ற கூட்டத்தொடர் முடிவதற்குள் அறிவிப்பாகவோ அல்லது 110 அறிவிப்பாகவோ சரண்டர் மற்றும் அகவிலைப்படி உயர்வு ஆகியவற்றை அறிவிப்பார் என்று உறுதியளித்திருந்த நிலையில் அதுபற்றி எந்த அறிவிப்பையும் வெளியிடாமல் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிவடைந்துள்ளது. இது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியில் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

01.06.1988 முதல் ஒன்றிய அரசின் ஊதிய விகிதங்கள் மாநில அரசு பணிகளுக்கும் நீட்டிக்கப்பட்டதன் காரணமான சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினங்கள் அரசின் நிதி ஆதாரங்களால் ஈடுகட்டமுடியாத அளவிற்கு அதிகரித்து வந்ததாகவும் இதனால் கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நலத் திட்டங்களை நிறைவேற்ற போதிய நிதியில்லா நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அரசின் செலவினங்கள் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் ஓய்வூதியம் ஆகியவற்றினை வழங்கியதன் காரணமாக போதிய நிதியில்லா நிலை ஏற்பட்டுள்ளதாக கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பதற்கு ஒப்பானதாகும். இப்படி ஒரு காரணத்தைச் சொல்வதற்கு எந்த ஒரு மாநில அரசும் வெட்கப்பட வேண்டும். அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியம் என்பவை ஒரு மக்கள் நல அரசின் மறுக்கமுடியாத கடமையாகும். 1988ஆம் ஆண்டிலிருந்து ஆட்சியிலிருந்த திமுக மற்றும் அதிமுக அரசாங்கங்கள் நிதி ஆதாரங்களை பெருக்குவதற்கான வழிமுறைகள் எதையும் காணாமல், அரசுக் கருவூலத்தில் இருந்த நிதி ஆதாரங்களை எல்லாம் தங்கள் தேர்தல் ஆதாயங்களுக்காக இலவசங்களாகவும் பொங்கல் பரிசாகவும் வழங்கிவிட்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தால் நிதி செலவின்ம் அதிகரித்து விட்டதாக அபாண்டப் பழியைப் போடுவது ஜீரணிக்கமுடியாத ஒன்றாகும்.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நிதியிழப்பை சந்தித்து வருவதை இந்த அரசு 20 வருடங்களுக்குப் பிறகே உள்வாங்கிக் கொண்டுள்ளது என்பதும் அதற்கு வருடாந்திர திட்டத்தை உருவாக்குவதற்கு முறையான

கட்டமைப்பு இல்லாத காரணத்தினால் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நிதியிழப்பை சந்திக்க நேர்ந்துள்ளதாகவும், பாதுகாப்பின்மைக்கும் ஆளாவதாக தெரிவித்துள்ளதும் அரசாங்கத்தின் நிர்வாகத் திறமையின்மையை வெளிக்காட்டுவதாகவே அமைந்துள்ளது.

இந்த காரணங்களை நாம் பலமுறை இந்த அரசாங்கத்திற்கும் இதற்கு முன்னிருந்த அரசாங்கங்களுக்கும் தெரிவித்தும் பாராமுகமாக இருந்துவிட்டு இப்போது புதிய ஓய்வூதியத்திட்டத்தின் பாதுகாப்பற்ற தன்மையை புரிந்துகொண்டுள்ள அரசு அதனை சமன் செய்யும் விதமாக பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு மாற நடவடிக்கை எடுக்க முன்வராமல் அதேபோன்றதொரு வாழ்வாதாரப் பாதுகாப்பற்ற தேசிய ஓய்வூதிய திட்டத்தில் தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை சேர்க்க முன் வந்திருப்பது வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவதாக உள்ளது. ஏற்கெனவே தேசிய ஓய்வூதியத் திட்டத்திலிருந்து வெளியேறி பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு நான்கு மாநிலங்கள் மாறியுள்ள நிலையில் தமிழ்நாடு அரசு மட்டும் தேசிய ஓய்வூதியத் திட்டத்தை தேர்ந்தெடுத்து நகர்வது தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் அனைவரையும் உயிருடன் சவக்குழியில் தள்ளி மண்ணைப்போட்டு மூடுவதற்கு ஒப்பானதாகும்.

மேலும் நூறாண்டாக தொழிலாளர் வர்க்கம் போராடிப் ற்றெ அடிப்படை உரிமைகளான 8 மணி நேர வேலை நேரம், வேலைக்கேற்ற ஊதியம், தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு, நிரந்தர வேலை போன்றவற்றை ஒழித்து 12 மணி நேர வேலை, ஊதியங்களை குறைந்தபட்சமாக நிர்ணயித்தல், தொழிலாளர்களின் பாதுகாப்பு நலன்களைக் குறைப்பது, ஒப்பந்தவேலை முறை போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்து எதிர்கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பால் அது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதைபோலவே யாரையும் கலந்தாலோசிக்காமல் அவுட்சோர்சிங் முறையில் ஆட்களை நியமிப்பதற்கான அரசாணையை வெளியிட்டு அதனையும் அனைத்துத் தரப்பினரின் கடும் எதிர்ப்பால் நிறுத்தி வைத்துள்ளது. தமிழக அரசின் இத்தகைய நடவடிக்கைகள், இந்த அரசாங்கம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொழிலாளர் போன்ற உழைக்கும் வர்க்கத்தினருக்கு எதிரானவையாக தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் நாம் நம்முடைய உரிமைக்காக இனிமேலும் களம் காணாமல் இருந்தால் நம்முடைய உரிமைகளை நாம் இழந்து அடிமைகளாக நம்மை மாற்றிவிடும் நிலைமைகளைத்தான் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எனவே மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் தான் சொல்வது ஒன்று செய்வது ஒன்று என்ற தன்னுடைய செயல்பாட்டை மாற்றிக்கொண்டு திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவித்த வாக்குறுதிகளையும், நம்முடைய மாநாடுகள், போராட்டங்கள், கருத்தரங்களில் அளித்த உறுதி மொழிகளையும் மேலும் காலம் கடத்தாமல் உடனடியாக நிறைவேற்றிட வேண்டுமெனவும், அரசு ஊழியர், ஆசிரியர் போன்ற அனைத்துத்துறை போராட்டக்குழுத் தலைவர்களையும் அழைத்துப்பேசி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான உரிமைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும் தமிழ்நாடு முழுவதும் ஏப்ரல் 26ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டங்களை அனைத்து அலுவலகங்கள் முன்பாகவும் நடத்துவது என 24.04.2023 அன்று நடைபெற்ற அனைத்து துறை சங்கங்களின் போராட்டக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரசு ஊழியர்கள், ஆசிரியப் பெருமக்கள் அனைவரும் ஒன்றாக நம்முடைய நிலுவை கோரிக்கைகளை நிறைவேற்ற ஏப்ரல் 26ஆம் தேதி அவரவர் அலுவலகங்கள் முன்பாக ஒன்று கூடி குரல் எழுப்புவோம். பறிக்கப்பட்ட நம்முடைய உரிமைகளை மீட்டெடுப்போம்.

●

# உடலை ஆராதிப்போம்!

**- சுரேஸ் சில்வர் ஸ்டோன்**

கிடைத்தற்கரிய இறைவனின் கொடையான நமது உடல் ஒரு முறை கெட்டு விட்டால் சீர் செய்யவே இயலாது. உடலை கெடாமல் பாதுகாப்பது ஒன்றே மிகவும் எளிய வழியாகும்.

*1. The "STOMACH" is injured when you do not have breakfast in the morning.*

காலைச் சிற்றுண்டி உண்ணாவிட்டால் நமது இரைப்பை பாதிப்புறும்.

*2. The "KIDNEYS" are injured when you do not even drink 10 glasses of water in 24 hours.*

தினசரி 2 லிட்டர் தண்ணீர் பருகாவிட்டால் நமது சிறுநீரகங்கள் பாதிக்கப்படும்.

*3. "GALLBLADDR" is injured when you do not even sleep until 11 o'clock and do not wake up to the sunrise.*

இரவு 11 மணிக்குமேல் விழித்திருந்தாலும் காலை சூரிய உதயத்திற்குள் விழிக்காவிட்டாலும் நமது பித்தப்பை பாதிப்புறும்.

*4. The "SMALL INTESTINE" is injured when you eat cold and stale food.*

மிகவும் குளிர்ந்த மற்றும் பழைய கெட்டுப்போகும் தருவாயில் இருக்கும் உணவை உண்பது நமது சிறுகுடலுக்குத் தீங்கு.

*5. The "LARGE INTESTINES" are injured when you eat more fried and spicy food.*

அதிக அளவில் பொரித்த உணவு மற்றும் அதிக காரம் நமது பெருங்குடலுக்குக் கேடு.

*6. The "LUNGS" are injured when you breathe in smoke and stay in polluted environment of cigarettes.*

புகை மற்றும் சிகரெட் புகை சூழ்ந்துள்ள இடத்தில் சுவாசிப்பது நமது நுரையீரல்களைக் கெடுக்கும்.

*7. The "LIVER" is injured when you eat heavy fried food, junk, and fast food.*

துரித உணவு, அதிகநேரம் எண்ணெயில் வறுக்கப்பட்ட உணவு முதலியன நமது கல்லீரலுக்குக் கேடு.

*8. The "HEART" is injured when you eat your meal with more salt and cholesterol.*

அதிக உப்பும் அதிக கொழுப்பும் இதயத்தை வெகுவாகப் பாதிக்கும்.

*9. The "PANCREAS" is injured when you eat sweet things because they are tasty and freely available.*

அதிக இனிப்பு நமது கணையத்தைச் சேதப்படுத்தும்.

*10. The "Eyes" are injured when you work in the light of mobile phone and computer screen in the dark.*

இருளில் செல்போன் மற்றும் கணிணியில் வேலை செய்வது கண்களுக்குக் கெடுதல் விளைவிக்கும்.

*11. The "Brain" is injured when you start thinking negative thoughts.*

எதிர்மறை எண்ணங்கள் நமது மூளையைப் பாதிக்கும்.

*12. The "SOUL" gets injured when you don't have family and friends to care and share with you in life their love, affection, happiness, sorrow and joy.*

நமது குடும்பம், நட்பு, உற்றார், உறவினர்களின் அன்பும் அனுசரணையும், பராமரிப்பும் இல்லையெனில் நமது உயிருக்கு நன்றன்று.

*"All these body parts are NOT available in the market."* "நமது எந்த உள்ளுறுப்பும் சந்தையில் கிடைக்காது."

*So take good care and keep your body parts healthy.* எனவே நல்ல கவனத்துடன் உடற்பயிற்சியையும் நாள்தோறும் தவறாது செய்து நமது உள்ளுறுப்புகளைப் பாதுகாப்போம். ●

# ஒன்றிய அமைச்சரைக் காப்பாற்ற மல்யுத்த வீராங்கனைகள் மீது தரக்குறைவான தாக்குதல்

## - தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கண்டனம்

தில்லியில் போராடும் மல்யுத்த வீராங் கனைகள் மீது, குடிபோதையில் சென்று தில்லி காவல்துறையினர் நடத்திய தாக்குதல் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், இந்த சம்பவத்திற்கு அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம் தெரி வித்துள்ளனர். இதுதான் 'பேட்டி பச்சாவோ' எனும் பெண் குழந்தைகளைக் காக்கும் லட்சமணமா என்று ஒன்றிய பாஜக அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ளனர்.

**பாலியல் பாஜக எம்.பி.,**

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலை வரும், பாஜக எம்.பி.யுமான பிரிஜ் பூஷன் சரண் சிங் (67) மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கடந்த ஜனவரி மாதம் புகார் எழுந்தது. இது தொடர்பாக பல்வேறு கட்டங்களாக மல்யுத்த சம்மேளனத்தில் வீராங்கனைகள் புகார் அளித்தனர். ஆனால் பிரிஜ் பூஷன் தனது ஒன்றிய ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி வீராங்கனைகளின் புகாரை குழிதோண்டி புதைக்க முயன்றார். சுதாரித்துக்கொண்ட மல்யுத்த முன்னணி வீராங்கனைகள் வினேஷ் போகத், சாக்சி மாலிக், கீதா போகத் ஆகியோர் மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியாவுடன் இணைந்து தில்லி ஜந்தர் மந்தரில் பிரிஜ் பூஷன் சிங்கிற்கு எதிராக போராட்டத்தைத் துவங்கினர். இதனை சற்றும் எதிர்பாராத ஒன்றிய பாஜக அரசு, இந்திய முன்னணி குத்துச் சண்டை வீராங்கனை மேரிகோம் தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்து பிரச்சனையை சமாளிக்க முயன்றது. மேரி கோம் ஆற அமர விசாரிப்பார்; அதற்குள் பிரச்சனையின் சூடு குறைந்துவிடும் என்பது ஒன்றிய பாஜக அரசின் கணக்கு. ஆனால் மேரிகோம் விசாரணையை மிகவிரைவாக நடத்தி அறிக்கையை தாக்கல் செய்தார். மேரிகோம் அறிக்கையின் அடிப்படையில் தங்களுக்கு உரிய நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் மல்யுத்த வீரர்- வீராங் கனைகள் போராட்டத்தை கைவிட்டனர். ஆனால், ஒன்றிய விளையாட்டுத்துறை அமைச்சகம், மேரிகோம் அறிக்கையை வாங்கி வைத்துக் கொண்டதோடு சரி, அதனை வெளியிடாமல், அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்காமலும் கள்ளமவுனமாக இருந்து கொண்டது. சொந்த கட்சி எம்.பி., என்பதால் பிரிஜ் பூஷனைக் காப்பாற்றுவதற்காக காலம் தாழ்த்தும் வேலையை செய்து வந்தது.

**மீண்டும் போராட்டம்**

இதனால் தாங்கள் ஏமாற்றப்படுவதை உணர்ந்த மல்யுத்த வீராங்கனைகள் - வீரர்கள் தில்லியில் கடந்த வாரம் மீண்டும் போராட்டத்தில் இறங்கினர். மேலும் பிரிஜ் பூஷன் மீது உடனடியாக எப்ஐஆர் பதிய வலியுறுத்தி 7 மல்யுத்த வீராங்கனைகள் கூட்டாக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். உச்சநீதிமன்றமும் இம்மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதுடன், தில்லி காவல்துறை பதிலளிக்க உத்தர விட்டது. இதனால், சுதாரித்துக் கொண்ட மோடி அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தில்லி காவல்துறையினர் பிரிஜ் பூஷன் மீது 2 பிரிவுகளில் (ஒன்று போக்சோ) வழக்குப் பதிவு செய்தது. எனினும், அவரைக் கைது செய்யவோ, விசாரணை நடத்தவோ தயா ரில்லை. இதனால் பிரிஜ் பூஷன் பதவியிலிருந்து விலகும் வரையிலும், அவரை சிறைக்கு அனுப்பும் வரையிலும் போராட்டத்தை கைவிடும் பேச்சுக்கே இடமில்லை என மல்யுத்த வீராங்கனைகள் அறிவித்தனர். ஜந்தர் மந்தரில் போராட்டத்தில் தொடர்ந்தனர்.

**குடிபோதையில் போலீசார் தாக்குதல்**

இதனிடையே, புதனன்று தில்லி ஜந்தர் மந்தர்

பகுதியில் லேசான மழை பெய்தது. இரவு வரை மழை நீடித்ததால் போராட்ட களத்தை நீர் சூழ்ந்தது. தரையில் உறங்க முடியாது என்பதால் மல்யுத்த வீரர் - வீராங்கனைகளுக்காக படுக்கை விரிப்பு ஏற்பாடுகளை செய்தார் ஆம் ஆத்மி எம்எல்ஏ சோம்நாத் பாரதி. ஆனால், அனுமதியின்றி போராட்டக் களத்துக்கு வந்ததாக கூறி சோம்நாத் பாரதி எம்எல்ஏ-வை கைது செய்து, அவரிட மிருந்த மடிக்கும் வகையிலான படுக்கை விரிப்புகளை போலீசார் பறிக்க முயன்றனர். அப்போது மல்யுத்த வீரர் - வீராங்கனை களுக்கும் போலீசாருக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. திடீரென வீரர் - வீராங்கனைகள் மீது தாக்குதல் நடத்தத் துவங்கிய போலீசார், கடுமையான வன்முறையை பிரயோகித்தனர். படுக்கை விரிப்புக்களையும் பறித்தனர்.

இதில், வினேஷ் போகத், கீதா போகத் சகோதரிகளின் இளைய சகோதரர் துஷ்யந்த் போகத்துக்கு மண்டை உடைந்தது. மேலும் சில வீரர் - வீராங்கனைகளும் போலீஸ் தாக்குதலில் காயம் அடைந்தனர்.

### கதறி அழுத வினேஷ் போகத் மற்றும் சாக் சி மாலிக்

மேலும், இந்த திடீர் தாக்குதலால் அதிர்ச்சியடைந்த மல்யுத்த வீராங்கனைகளான சாக்சி மாலிக் மற்றும் வினேஷ் போகத், போராட்டக்களத்திலேயே இரு வரும் கதறி அழுதனர். குறிப்பாக, சாக்சி மாலிக் வாயில் உள்காயத்துடன் அலறித் துடித்தார். "இப்படி தாக்குதல் நடத்த நாங்கள் ஒன்றும் குற்றவாளிகள் இல்லை. எங்களை கொல்ல விரும்பினால் கொல்லுங்கள்" என்று வினேஷ் போகத்தும் கண்ணீர் விட்டார்.

### பதக்கங்களை எடுத்துக்கொள்ளுங்கள்

"நான் வென்ற அனைத்து பதக்கங்களையும் அரசாங்கம் திருப்பி எடுத்துக் கொள்ளட்டும் என்று வேண்டுகோளாக வைக்கிறேன்" என ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற பஜ்ரங் பூனியா கொதிப்புடன் கூறினார்.

### மது அருந்தியிருந்த தில்லி போலீசார்

மல்யுத்த வீராங்கனைகள் போராட்டத்தில் தாக்குதல் நடத்தியவர்கள், சீருடை அணி யாத போலீசார் எனவும், அவர்கள் அனை வரும் மது அருந்தியிருந்ததாகவும் மல்யுத்த நட்சத்திரங்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

### தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கண்டனம்

தில்லி காவல்துறையின் அடக்குமுறையை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் கீழ் நேரடியாக வரும் தில்லி காவல்துறை, போராட்டக்காரர்களைத் துன்புறுத்துவதற்குப் பதிலாக, பாஜக எம்.பி.யும் மல்யுத்த சம்மேளன தலைவருமான பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்"

"நம் நாட்டு வீரர் - வீராங்கனைகளிடம் இதுபோன்று நடந்து கொள்வது மிகவும் வெட்கக்கேடானது. பேட்டி பச்சாவோ (பெண்களை காப்போம்) என்று பாஜக கூறுவது வெற்றுக் கோஷம். உண்மையில் இந்தியாவின் மகள்களை சித்ரவதை செய்வதற்கு பாஜக ஒரு போதும் வெட்கப் படுவது கிடையாது" என ராகுல் காந்தி கூறியுள்ளார்.

வினேஷ் போகத் மற்றும் சாக்சி மாலிக் ஆகியோர் தாங்கள் சித்ரவதை செய்யப்படுவதாக என்னிடம் கூறியுள்ளனர். மேலும் குடிபோதையில் இருந்த போலீஸ் அதிகாரிகள் அவர்களிடம் தவறாக நடந்து கொண்டனர் என்றும் தெரிவித்துள்ளனர். தில்லி போலீசார் ஏன் அவரை கைது செய்யவில்லை? என்ற கேள்வி மக்கள் மன்றத்தில் எழுப்பப்பட்டு வருகிறாது. பெண்களின் மீது பாஜக ஒன்றிய அரசு நடந்து கொள்ளும் விதம் மிகவும் இழிவானதாகும் மலினமானதாகவும் உள்ளது. போராட்டம் நடத்து மல்யுத்த வீராங்கனைகளுக்கு போதிய பாதுகாப்புக்கூட அளிக்காமல் டில்லி காவல் துறை பிரிஜ் பூஷன் சிங்கை பாதுகாப்பது ஏன்?

அவரை உடனடியாக கைது செய்து, சிறையில் அடைத்து மல்யுத்த வீராங்கனைகள் எழுதியுள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டு கொள்வதோடு டில்லி காவல் துறையின் வெட்கப்படவேண்டிய நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கடுமையான கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது. ●

கவிதை

# மீண்டும் மேதினப் போர்

- பெரணமல்லூர் சேகரன்

மேதின நிகழ்வுகளில்
கவனம் செலுத்தி வந்த வர்க்கப்படை
எதிர்பாரா தாக்குதல் தொடுத்து
மேதினத்தையே கேள்விக்குறியாக்கியது
அதிகார வர்க்கப்படை

மீண்டும் துவங்கியது
மேதினப்போர்
யாண்டும் செங்கொடி
உயருது பார்

நவீன தொழில் நுட்பம்
உச்சாணிக் கொம்பில்
நாடாள்வோர் சிந்தனை
வேலை நேரத்தைக் குறைப்பதில்
எனில் நற்சிந்தனை
வேலை நேரத்தை
ஐம்பது விழுக்காடு கூட்டுவதெனில்
தொழிலாளர் விரோத துர்ச்சிந்தனை

விரும்பிக் கேட்டது யாருமில்லை
விரும்பாமல் திணிக்க
ஆட்சியாளர்க்கு உரிமையில்லை

பன்னிரண்டு மணிவேலை
பகாசுர நிறுவனங்களுக்கு நற்செய்தி
பாட்டாளி வர்க்க மக்களுக்கு
துர்ச்செய்தி

எட்டுமணி நேர வேலை
அதிகார வர்க்கம்
தானாய் வழங்கியதல்ல
ரத்தச் சேற்றில்
உரத்து முழங்கிப் பெற்றது


நூற்றைம்பது ஆண்டுகளாய்
தொடர்ந்த வர்க்கப்போரது
மேதினத்தியாகிகளின் மௌனம்
வலியதாய் சாதித்தது
உலகெங்கும் எட்டு மணிநேர
உரிமை உடமையானது

வரலாறு அறியாத வல்லூறுகள்
தொழிலாளி வர்க்கத்தை
சுரண்டும் சர்வாதிகாரிகள்
பெருநிறுவனங்களின் அடிவருடிகள்

எதிர்க்கட்சியாய் இருக்கும்போது
உருகி வழிவது
ஆளுங்கட்சியாய் மாறும்போது
சுரண்டிக் கொழுப்பது
முதலாளியக் கட்சிகளின் இயல்பு
நாங்களென்ன விதிவிலக்கா
எனக் கேட்பது புரிகிறது
பாடம் புகட்ட
போர்ப் பாதை தெரிகிறது

கோடிக்கால் பூதமிது
கோபத்தின் ரூபமிது
தொழிலாளி வர்க்க வேதமிது

புறப்பட்டது போருக்கு
சிறைக்கஞ்சாதது
தியாகத்தால் வரலாறாவது
மீண்டும் எட்டுமணி நேர வேலை
யாண்டும் பெறுவது பிறப்புரிமை
அதுவே சுவாசப் பெருமை



# "பெரியார் தான் தமிழ்நாட்டுக்கு எல்லாம் பண்ணாரா?"

ரொம்ப நாளா, இதை பத்தி எழுதணும்னு இருந்தேன்.

"பெரியார் தான் எல்லாம் பண்ணாரா?" அப்படிங்கிற கேள்விக்கு என்னோட பதில் 'ஆமாம் பெரியார் தான் எல்லாம் பண்ணார்!'

வடக்குல அம்பேத்கர் என்ன பண்ணாரோ, அதை இங்கே பெரியார் பண்ணார். சொல்லப்போனா, 1927ல அம்பேத்கர் 'மகத்' பொதுக் குளத்துல 'தீண்டப்படாத' மக்களை திரட்டி தண்ணீர் எடுக்கும் போராட்டத்தை நடத்துனதுக்கு உந்துசக்தியா இருந்ததே 1925ல பெரியார் வைக்கத்துல நடத்துன சத்தியாகிரகம்தான்னு அம்பேத்கர் நடத்துன "Mook Nayak" பத்திரிகையோட தலையங்கத்துல் பதிவு பண்ணியிருக்கார்.

அயோத்திதாசர், ரெட்டைமலை சீனிவாசன் உட்பட எத்தனையோ பேரால முடியாத விஷயங்களை செஞ்சு காட்டுனவர் பெரியார். புத்தர் கூட தோத்து போனார். ராமலிங்க வள்ளலார் எரிச்சு கொல்லப்பட்டார்.

2000 வருஷமா கண்ணை மூடிட்டு பின்பற்றி வந்த சாஸ்திரத்தை, ஜாதியை, மூடநம்பிக்கைகளை இவ்வளவு வலிமையா பெரியாரை விட வேற யார் எதிர்த்தது இருக்காங்க? ஒரு பேரை சொல்லுங்களேன் பார்ப்போம்..

இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்குறதுக்கு 30 வருஷம் முன்னாடி இருந்தே, வகுப்புவாரி இடஒதுக்கீடு வேணும்னு குரல் கொடுத்தவர் பெரியார். காங்கிரஸ் கட்சியில சேர்ந்து 6 வருஷமா கேட்டும் இடஒதுக்கீட்டு தீர்மானத்தை கொண்டுவராததால, "சமூகத்தை பத்தி கவலைப்படாம, சுதந்திரம் கிடைச்சு என்ன பிரயோஜனம்...? இடஒதுக்கீடு தீர்மானத்தை காங்கிரஸ் கட்சி நிறைவேத்தாதுன்னா, எனக்கு காங்கிரஸே வேணாம்"னு சொல்லி கட்சியை விட்டு விலகுனவர் பெரியார். காங்கிரஸை விட்டு வெளியேறி, சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார் பெரியார். "காங்கிரஸ் கட்சி என் எதிரி இல்ல, ஜாதி தான் எதிரி... ஜாதியை தூக்கி பிடிக்குற வைதீக மதத்தையும், கடவுளை போதிக்குற சாஸ்திரத்தையும்,

மூடநம்பிக்கைகளையும் வாழ்க்கை முழுக்க தீவிரமா எதிர்க்க போறேன்"னு சொன்னார்.

1937ல மெட்ராஸ் பிரசிடென்சியோட முதல்வரா ராஜாஜி இருந்தப்போ, பள்ளிக்கூடங்கள்ல ஹிந்தியை கட்டாய மொழி ஆக்குனப்போ இந்த மாகாணம் முழுக்க ஹிந்திக்கு எதிரா புரட்சி வெடிக்க காரணமா இருந்தார்.

1939ல ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்துல உயிரை விட்ட தாளமுத்து நடராசனுக்கு 1940ல வடசென்னையில நினைவு மண்டபம் எழுப்பினார் பெரியார். இந்தியாவிலேயே பேருக்கு பின்னால ஜாதியை போட்டுக்காத ஒரே மாநிலமா தமிழ்நாடு இருக்குறதுக்கு ஒரே காரணம், சுதந்திரம் அடையுறதுக்கு முன்னாலேயே'சுயமரியாதை இயக்கம்' மூலமா பெரியார் எடுத்த முன்னெடுப்பு! இன்னைக்கு வரை, ஒருத்தனோட ஜாதியை நேரடியா கேட்குறதுக்கு கூச்சப்படுறானுங்க இல்ல? அதுக்கு காரணம், பெரியார் இல்லாம வேற யாரு?

தமிழ் மொழியை எளிமையா எழுதுறதுக்காகவும், அச்சடிக்குறதுல இருக்குற சிரமங்களை குறைக்குறதுக்காகவும்...15 தமிழ் எழுத்துக்கள்ல சீர்திருத்த மாற்றங்களை முன்மொழிந்தார் பெரியார். அவரோட இந்த மொழி சீர்திருத்தத்தை அக்டோபர் 1978ல அரசாணையில கொண்டுவந்த பெருமை, முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரை சேரும்.

கடந்த 100 வருஷத்துல பெரியார் அளவுக்கு பெண்களுக்காக பேசுன ஒரு தலைவர்,இந்தியா முழுமையிலும் கிடையாதுன்னே சொல்லலாம். உடன்கட்டை ஏறுதலுக்கு எதிராவும், குழந்தை திருமணத்துக்கு எதிராவும், தேவதாசி முறைக்கு எதிராவும் பேசியவர், போராடியவர் பெரியார். விதவை மறுமணத்தோட அவசியம் பத்தியும், குடும்பக்கட்டுப்பாடோட அவசியம் பத்தியும்,பெண்களுக்கு சொத்துல உரிமை வேணும்ன்னும் பல மேடைகள்ல பேசுனவர்.

இன்னைக்கு நாம பேசுறோமே.. பொண்ணுங்களோட financial independence, பொண்ணுங்க அவங்களுக்கு பிடிச்ச மாதிரி டிரஸ் பண்ணனும்ன்னு அதையெல்லாம் அந்த மனுஷன் 100 வருஷமா முன்னாலேயே பேசிட்டு போயிருக்கார். பிரிட்டிஷ் ஆட்சியில கம்யூனிச கொள்கை தடை செய்யப்பட்டிருந்தப்போ, கம்யூனிச கொள்கைகளை மொழிபெயர்த்து எழுதி மக்கள்கிட்ட பரப்புனவர் பெரியார்.

ஒரு முறை காந்திஜி அவர்கள் "தீண்டாமை தப்பு, ஆனா வர்ணாசிரமம் தப்பு இல்ல"ன்னு சொன்னப்போ உடனே அவரை போய் பெங்களூர்ல சந்திச்சு தன்னோட எதிர்ப்பை தெரிவிச்சுட்டு வந்தார் பெரியார்.. "நம்ம சட்டம் தீண்டாமைக்கு எதிராதான் இருக்கு, ஜாதிக்கு எதிரா இல்ல. அதையேதான் நீங்களும் சொல்றீங்க, மகாத்மா... மதத்தை வெச்சுக்கிட்டு, சமுதாயத்துல உங்களால எந்த சீர்திருத்தத்தையும் பண்ண முடியாது"ன்னு சொல்லிட்டு வந்தார்.

1939ல ஹிந்தி எதிர்ப்பு போராட்டம் உச்சத்துல இருந்தப்போவும், 1942 காலக்கட்டத்துலயும், இரண்டு முறை முதல்வர் பதவி பெரியாரை தேடி வந்தது... அவர் தலைமையில மந்திரி சபை அமைக்க சொல்லி ஆளுநர் சொன்னப்போ, 'வேணாம், எனக்கு பதவியில ஆசை இல்ல'ன்னு பெரியார் சொல்லிட்டார்.

ராஜாஜி அவர்கள் கூட 'உங்க தலைமையில ஆட்சி அமைச்சா, நான் காங்கிரஸ் ஆதரவு வாங்கி தர்றேன்"னு சொன்னார். ஆனா, "பதவின்னு வந்துட்டா, நாம எவனை எதிர்க்குறோமோ அவன் கூடவே சமாதானமா போகவேண்டியிருக்கும்.. அதனால, சாகுற வரைக்கும் எந்த அரசியல் பதவியும் வேணாம்ங்கிறதுல நான் ரொம்ப தெளிவா இருக்கேன்.. அரசியல்வாதிகளுக்கு வேணா அந்த பொழப்பு சரிப்பட்டு வரும், எனக்கு அது வேணாம்"னு சொல்லிட்டார். எந்தவொரு உட்சபட்ச பதவியையும், பணத்தையும் துட்சமா நினைச்ச ஒரு தலைவர் பெரியார்!

1947'ல இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைச்சப்போ கூட, "அதிகாரம் பிரிட்டிஷ் காரன் கையிலருந்து, பார்ப்பனர்கள் கைக்கு போயிருக்கு அவ்ளோதான்... அடிமட்ட ஜனங்களுக்கு இது ஒரு துக்க நாள் மட்டுமே"ன்னு சொன்னார் பெரியார்!

எல்லா தலைவர்களும் தன்னை பின்தொடர்ந்து வர்றவங்களை எல்லாம் "நான் சொல்றத செய்ங்க"ன்னு தான் சொல்வாங்க. ஆனா, பெரியார் ஒருத்தர் தான், 'யார் எது சொன்னாலும்,

அதை நம்பாதீங்க... கேள்வி கேளுங்க... ஏன், நானே சொல்றதையும் கேள்வி கேளுங்க... அப்புறமா, நீங்க முடிவெடுங்க.. உங்களுக்கு எது சரின்னு படுதோ அதை பண்ணுங்க"ன்னு சொன்னார். ஒரு முறை, மெட்ராஸ் யூனிவர்சிட்டியோட *vice chancellor* சுந்தரவடிவேலு அவர்கள் “இன்னைக்கு கிராமத்துல கூட படிச்சவங்க எண்ணிக்கை ஜாஸ்தியா இருக்கு, நிறைய கல்விக்கூடங்கள் இருக்குதுன்னா, அதுக்கு நீங்க கொண்டு வந்த திட்டங்கள்தான் காரணம்"ன்னு காமராஜரை புகழ்ந்தப்போ, "இதுக்கெல்லாம் பெரியார்தான் காரணம். அவர்தானே அடித்தட்டு மக்கள் எல்லாரும் படிக்கணும்ன்னு ஆசைப்பட்டார்"ன்னு பெரியாரை நினைவுகூர்ந்தார் காமராஜர்.

தமிழ்நாட்டுல காங்கிரஸ் கட்சியை ஒரு கோட்டையா ஆக்க பாடுபட்டவர் பெரியார். அந்த கோட்டையை கட்டி எழுப்பிட்டு, அதை அனுபவிக்காம வெளியே போய்ட்டார். அவர் நினைச்சிருந்தா, எப்பவோ முதல்வர் ஆகியிருக்கலாம். ஆனா, மக்கள் தொண்டுதான் முக்கியம்ன்னு நினைச்சார். காங்கிரஸ்ல இருந்துக்கிட்டு பெரியார் சொன்ன சமூகநீதி கொள்கையை நான் செயல்படுத்துறேன்னு சிலர் என் மேல புகார் சொல்றான். அதுக்கு நான் பெருமைப்படுறேன்"னு சொன்னார் 'கல்வி கண் திறந்த' காமராஜர்.

பேரறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்ததும் முதல்ல கையெழுத்து போட்ட "சுயமரியாதை திருமண சட்டம்" உருவாக முழுமுதற் காரணமா இருந்தவர் பெரியார்.

இந்தியாவிலேயே *OBC* ரிசர்வேஷனை முதன்முதல்ல கொண்டுவந்த மாநிலம் தமிழ்நாடு. அதே போல, இந்தியாவிலேயே முதல்முறையா தலித் சமூகத்தை சேர்ந்த ஒருத்தர் நீதிபதி ஆன பெருமையும் பெரியார் அவர்களையே சேரும். அனைத்து சாதி மக்களும் கோவில் கருவறைக்குள் போக அனுமதி வேண்டும்"ன்னு போராட போறேன்னு பெரியார் சொன்னார்.... அப்போ, "அதுக்கு அவசியமே இல்ல.. எல்லா சமூகத்தினரும் அர்ச்சகர் ஆகலாம்ன்னு சீக்கிரமே ஒரு சட்டம் கொண்டுவர்றேன்"னு சொல்லி அந்த போராட்டத்தை நிறுத்தினார் கருணாநிதி.

பெரியாரை பத்தி பேரறிஞர் அண்ணா "உலக தலைவர்களில், தன்னுடைய காலத்திலேயே தன் கொள்கை வெற்றி பெறுவதைப் பார்த்த ஒரே ஒருவர் நீங்கள்தான்"னு சொன்னார். அதுதான் உண்மையும் கூட. ஹிந்துத்துவா, தமிழ் தேசியம் உட்பட எந்த அரசியல் கொள்கையை முதன்முதல்ல பேசுனவங்களும் அந்த கொள்கை அரசியல்ரீதியா வெற்றியடையுறதை பார்க்கல!

காமராஜர், அண்ணா, கருணாநிதி, ஜெயலலிதா, தொல்.திருமாவளவன், வைகோ, ராமதாஸ், உத்திர பிரதேச முன்னாள் முதல்வர் மாயாவதி, பகுஜன் சமாஜ் கட்சியோட நிறுவனர் கன்ஷி ராம் உட்பட எத்தனையோ தலைவர்களோட சமூக நீதி கொள்கைகளுக்கு ரோல் மாடல் ஆக இருந்தவர் / இருப்பவர் பெரியார்.

பெரியார் அவர்கள் இறந்து போறதுக்கு சில நாள் முன்னால சொன்ன விஷயம்... "இந்தி திணிப்பை எதிர்த்து ஜெயிச்சாச்சு.. தெருவுக்குள்ள விடமாட்டேன்னு சொன்னவங்களை எதிர்த்து போராடி ஜெயிச்சாச்சு.. கோவிலுக்குள்ள விடமாட்டேன்னு சொன்னவங்களை எதிர்த்து ஜெயிச்சாச்சு..ஆனா, நான் சாகும்பொழுது இப்போவும் உங்களை எல்லாம் சூத்திரனாவே விட்டுட்டு போறேனே. இந்த ஜாதியை இன்னமும் ஒழிக்க முடியலையே"ன்னு வருத்தப்பட்டார். நாடு முழுக்க கால்தடம் பதிச்ச மதவாத சக்திகள், இன்னமும் தமிழ்நாட்டுல மட்டும் நோட்டாவுக்கு கீழே இருக்குன்னா அதுக்கு காரணம் பெரியார் அவர்கள் வளர்த்தெடுத்த சமூகநீதி, சமத்துவ கொள்கைகள்!

ஆமா... பெரியார் தான் எல்லாம் பண்ணார். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com